Digitization by eGangotri-South Center

பாலக்காடு

அருள்மிகு விற்றுணி விநாயகர் திருக்கோயில்

வரலாறும் வழிபாடும்



கே.ஏ. சீனிவாசன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாலக்காடு
அருள்மிகு விற்றுணி விநாயகர்
திருக்கோயில்

வரலாறும் வழிபாடும்



ஆசிரியர்
கே.ஏ. சீனிவாசன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நூல் விவரம்

முதற்பதிப்பு : 1999

உரிமைப் பதிப்பு :

இலவச வெளியீடு

நூல் கிடைக்குமிடம் :

வசந்தா சீனிவாசன்
எண் 2, வசந்த நிவாஸ்
அப்பாராவ் காலனி,
சென்னை – 600 047.
✆ : 044 – 236 33 20

அச்சிட்டோர் :

ஸ்ரீ சத்யா எண்டர்பிரைஸஸ்,
37, வேம்புலியம்மன் கோயில் தெரு,
பழவந்தாங்கல், சென்னை – 114.
✆ : 234 1226.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அர்ப்பணம்

இப்பிறவியில் இந்த ஆத்மாவுக்கு உருக்கொடுத்து உலகிற்கு அறிமுகப்படுத்திய எனது இனிய, பெருமைமிகு பெற்றோர்களான குன்னத்தூர் **திரு. ஆ. அருணாசலம் செட்டியார்** அவர்களுக்கும் **திருமதி. மீனாட்சி அம்மாள்** அவர்களுக்கும் இப்புத்தகம் அர்பணிக்கப்படுகிறது.

கே.ஏ. சீனிவாசன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

ஸ்ரீ காந்திமதி அம்பாள் உடனமர் ஸ்ரீ சால்வாடீஸ்வரர் துணை

ஸ்ரீ மத் ஞான சிவாச்சாரியார் சுவாமிகள் ஸன்னிதானம்

மேல்மடம், பேரூர், கோயமுத்தூர் – 641 010.

தொலைபேசி : 808725.

ஆசியுரை

இறைவன்பால் தனி ஈர்ப்பினைத் தாம் கொண்டு இறைவனைப் பற்றிய பாடல்கள் எழுதி வரும் ஆன்மீகக் கவிஞர் திரு. கே.ஏ. சீனிவாசன் அவர்களுக்கு ஸன்னிதானத்தின் ஆசீர்வாதம்.

''பாலக்காடு அருள்மிகு விற்றுணி விநாயகர் திருக்கோயில் வரலாறும் வழிபாடும்'' என்ற தலைப்பிட்ட நூல் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது கண்டு பெரிதும் மகிழ்கிறோம். தெய்வீகச் சிந்தனைச் சிறப்பு அனைத்து பாடல்களில் காணப்படுவதும், மிக எளிதான வகையில் பாடல் எழுதியிருப்பதும் அனைவரையும் படிக்கத் தூண்டும் வகையில் உள்ளது.

நமது மடத்தில் நவராத்திரி மஹோற்சவம் சிறப்பாக நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. அன்னை பராசக்தியை ஒன்பது நாட்களும் எவ்வாறு போற்றி வழிபடுகிறோம் என்பதை உணர்த்தும் வகையில் ஒன்பது திருப்பாடல்கள் பொருள்மிகக் கொண்டதாகவும் அருள்மிகக் கொள்ளும் வகையிலும் பாராயணத்திற்கும் பயனுள்ளதாக இருப்பது மிகவும் ஏற்புடைத்தாயுள்ளது. எழுதிய கவிஞருக்கு ஸ்ரீதேவியின் அருள் சித்திக்கட்டும்.

குருபக்தி ஆத்மஞானம் உண்டாவதற்கு அவசியமாகிறது. உபநிஷத்தும் குருபக்தி உள்ளவனுக்கே வேதாந்த ஞானம் பிரகாசிக்கும் என்று கூறுகிறது. குரு அறிவையும், ஞானத்தையும் உண்டுபண்ணுகிறார். இதனைப் பூரணமாக உணர்ந்து சைவ நெறி பிறழாது வாழும் குலத்தில் வந்த நீங்கள் இந்நூல் வெளியிட குருவின் ஆசி வேண்டியதில் வியப்பேதுமில்லை.

ஸன்னிதானத்தின் நிறைவான ஆசிகள் பூரணமாக உண்டு. ஓம்கார வடிவில் உறையும் விநாயகரின் மாண்பு உலகளவில் எவ்வாறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருமையுற்றுள்ளது என்பதற்கு பல்வேறு ஆதாரங்களைத் திரட்டித் தொகுத்து அளித்துள்ளது மிகுந்த பாராட்டுக்குரியது.

அரசூர் முதல் அமெரிக்கா வரை வாணிபம் செய்து பல அறப்பணிகளில் ஈடுபட்டு, தான தருமங்கள் செய்து வரும் அய்நூற்றுவர் சமுதாயத்தார் அனைவரும் பல்லாண்டு காலம் சீரோடும், சிறப்போடும் வாழ வேண்டுமென வாழ்த்தி ஆசிர்வதிக்கிறோம்.

நமச்சிவாய நாமத்தை நாளும் மறவாத உங்களது ஆன்மீகப் பணி தொடர்ந்து வளருவதாகுக. தெய்வீகப் பாடல்களை சிவனடியார் அனைவரும் தினமும் படித்துப் பயன் பெறுவதாகுக.

இறைப்பணியில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட திரு. கே.ஏ. சீனிவாசன் குடும்பத்தார் அனைவரும் குருவருளோடு திருவருளும் கிடைத்து நிறை வாழ்வு வாழ ஆசிர்வதிக்கிறோம்.

பேரூர்,
கோவை – 10

வாழ்த்துக்களுடன்,
ஸ்ரீமத் ஞான சிவாச்சாரிய சுவாமிகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரை-கொங்கு நாட்டின் குலகுரு

"ஸ்ரீமாணிக்கவாசகர் மடாலய மகா சந்நிதானம்"

"இறையருட் செம்மல்-ஆதிசைவ அருட்தோன்றல்"

ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்

கூனம்பட்டி ஆதீனம், பல்லகவுண்டம்பாளையம் (அஞ்சல்)
(வழி) விஜயமங்கலம் – 638 056.
✆ : 42056, 42547. STD : 04234.

இடம்: ஆதீனம்

நாள்: 27.2.99

வாழ்த்தும் ஆசியும்

சிவச்செல்வர் சீனிவாசன் அவர்களுக்கு சந்நிதானத்திலிருந்து எழுதிக்கொண்ட ஆசீர்வாதம்.

பாரம்பரியமாக இறை நெறியிலும், சமயப்பணியிலும் விளங்கி வரும் குடும்பத்தில் பிறந்த நீங்கள் உங்களின் முதல் தெய்வமாக வணங்கும் அருள்மிகு விற்றுணி விநாயகர் திருக்கோயில் சிறப்புக்களையும், வரலாற்றையும் அருட்பாடல்களாக அமைத்திருப்பது கண்டு பெரிதும் மகிழ்கிறோம். அப்பாடல்களெல்லாம் தேன் சொட்டும் பக்திச் சுவையோடு அமைந்திருப்பது கண்டு உள்ளம் நெகிழ்கிறது. அங்கு உறையும் தெய்வங்கள் அனைத்தையும் தனித்தனியே வடிவமைத்து பாடியிருப்பது பாராட்டுக்குரியதாகும். உங்களின் இந்த தெய்வீக முயற்சிக்கு எமது நிறைந்த ஆசிகள் உரித்தாகுக.

நீங்கள் படைத்துள்ள "அருள்மிகு விற்றுணியார் திருக்கோயில் வரலாறும், வழிபாடும்" என்ற தெய்வ நூல் சிறப்போடு அமையவும் பக்தப் பெருமக்கள் பலரும் இதனைப் பெற்றுப் பாராயணம் செய்து திருவருள் பெற்றிட வேணுமாய் குருவருளும் திருவருளும் துணை செய்ய வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

நிறைவுடன்

ச. இராஜலிங்க மாணிக்க வாசக சுவாமிகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

வாழ்த்துரை

(பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்)

அன்பர் கே.ஏ. சீனிவாசன் இயற்றியுள்ள 'விற்றுணியார் வரலாறும், வழிபாடும்' என்ற சிறிய நூலைப் படித்துக் கேட்டேன். ஐநூற்றுவர் செட்டியார்கள், பேட்டை நாணயக்காரச் செட்டியார்கள், பூவாளூர் சைவச் செட்டியார்கள் என்பன போன்ற பெயர்கள், வணிகத்தில் ஈடுபட்டிருந்த ஒரு குழுவினரைக் குறிக்கும் பெயர்களாகப் பண்டுதொட்டே வழங்கி வருகின்றன.

ஐநூற்றுவர் செட்டியாருக்கு பாலக்காட்டில் உள்ள விற்றுணி விநாயகர் குல தெய்வம் போன்று போற்றப்படுவதாகத் தெரிகிறது. இப்பெயரே ஆராய்ச்சிக்கு உரியதாகும். பொருளை விற்று வாணிபம் செய்யும் செட்டிமார்களுக்குத் தெய்வமாக இருப்பவர் பெயர் விற்று + உணி விநாயகர் என்று இருப்பது பொருத்தம். பொருளை விற்று அந்த ஊதியம் கொண்டு வாழ்பவர்கள் 'விற்று உணியார்' என்று பெயர் பெறுவது பொருத்தம். உணியார் என்பதற்கு உண்பவர்கள் என்பது பொருளாகும். சொல் வழக்கில் விற்றுணியார் எனப்படுவது விநாயகப் பெருமானையே குறிக்கும்.

விற்றுணி (வித்துண்ணி) என்பது அப்பகுதியின் பெயராக இருத்தலின் அவ்வூர் விநாயகருக்கு விற்றுணி விநாயகர் என்றும் பெயர் வந்திருக்கக் கூடும். எவ்வாறு இருப்பினும் 'விற்றுணியார்' எனக் குறிப்பிடுவதே சாலப்பொருந்தும்.

பாலக்காட்டில் உறையும் அப்பெருமானையும் அக்கோயிலில் எழுந்தருளியுள்ள காசி விஸ்வநாதர், விசாலாட்சி அம்மை முதலிய தெய்வங்களைப் பற்றியும் அன்பர் பாடியுள்ளார்.

"சிவனமுது எடுக்காது தமதுணவு கொள்ளாது
சிவபூஜை கொண்ட வணிகர்தம் திருக்கூட்டம்" மற்றும்

"அள்ளியே விடந்தன்னைத் தான் உண்பான்
அமரர்க்கு அமுதத்தை தந்து விடுவான்
துள்ளியே அவன் பாதம் பற்றிடுவோம்
துணை வேறு இல்லையெனச் சரணடைவோம்"

என்பது போன்ற சிறந்த பல தொடர்கள் இப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

அவர் தொண்டு சிறக்க விநாயகப் பெருமான் அருள் செய்வாராக.

19, நடேசன் ரோடு,
சென்னை – 83.

ஆசிகளுடன்,
அ.ச. ஞானசம்பந்தன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

எழுதியவன் பேசுகிறேன்

பாலக்காடு அருள்மிகு விற்றுணி விநாயகர் ஆலயத்தின் வரலாறும், வழிபாட்டுக்கான பாடல்களும் எழுதி நமக்கு என்றும் வழிகாட்டி வரும் குருவருளை நாடி பேரூர் மேல் மடம் குரு மகா சன்னிதானம் ஸ்ரீமத் ஞான சிவாச்சாரிய சுவாமிகள் மற்றும் கூனம்பட்டி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்க வாசக சுவாமிகள் ஆகியோரின் திருப்பார்வைக்கு ஆசி வேண்டி அனுப்பினேன்.

குல குருமார்கள், திருப்பாடல்களை உள்ளார்ந்து உற்று எனது ஆன்மீக உணர்விற்கு உரம் போடும் வகையில் உரையும் வாழ்த்தும் ஆசிகளும் அனுப்பியது எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே கருதி மகிழ்கிறேன். அவர்கள் திருவடிகள் வணங்கித் தொடருகிறேன்.

தமிழகத்தில் தலைசிறந்த தமிழ் ஆசான் திருமிகு அ.ச. ஞானசம்பந்தன் அவர்களையும் நேரில் கண்டு வாழ்த்துரை வேண்டினேன். உடலுக்கு வயதும், உள்ளத்திற்கு இளமையும் வளர்ந்து வரும் தமிழ்ப் பேரறிஞர்; இறை வழிபாட்டு பாடல்கள் என்ற வகையில் எனது எழுத்துக்களிலும் சிறந்த பல தொடர்கள் உள்ளன என எடுத்துக்காட்டி வாழ்த்தியது, எனது எண்ணங்களுக்குக் கிடைத்த வண்ண அங்கீகார முத்திரையாகவே கொள்கிறேன். எனது இதயபூர்வ நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

இனித்தான் இந்நூல் எழுதக் காரணமான கரு, கருவியாக அமைந்துதவியோரைப் பற்றிப் பேச முயல்கிறேன்.

நமது ஐநூற்றுவர் மகா சபைத் தலைவர் சிவத்திரு K. சண்முகம் செட்டியார் அவர்கள் நான் ஏற்கெனவே எழுதியிருந்த 'பக்திப் பாமாலை' என்ற கையடக்க நூலைக் கண்ணுற்று பாலக்காடு அருள்மிகு விற்றுணி விநாயகர் ஆலயத்தின் வரலாற்றையும் வழிபாட்டுக்கான பாடல்களும் எழுதுமாறு பணித்தார்கள். இதை அந்த இறைவனின் ஆணையாகவே ஏற்றுக் கொண்டேன். என்றும் மாறாப் புன்னகை கொண்ட சாந்த சீலரான, சிவநெறிச் செல்வரின் சீரிய தலைமைப் பொறுப்பில் இந்நூல் வெளிவருவது உருவாக்கிய எனக்குப் பெருமை தருவதாகவே உள்ளது.

சென்னை வருகை சமயம் என்னைச் சந்தித்த, வழிவழியாக ஸ்ரீ விற்றுணியாருக்குச் சேவை செய்யும் குடும்பத்திலுதித்த திரு. A.R.C.R.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொன்னம்பலம் சுந்தரி அவர்களும் உரிமையுடன் என்னை எழுதுமாறு கேட்டது எனது ஆர்வத்தை மேலும் தூண்டுவதாக இருந்தது.

திருவருளும், குருவருளும் சித்திக்க, சிந்தனைக்கு ஆன்மீகச் சிறகுகள் முளைக்க திருப்பாடல்கள் பறந்து வந்து எழுத்துருவில் ஏட்டின் ஏற்றமிகு இடத்தில் எவ்விதத் தடையுமின்றி தானே வந்தமர்ந்தன. இதற்கு இறைவனுக்கு நன்றி என்பதைவிட வேறு என்ன கூற?

திருக்கோயில் வரலாறு எழுத பலரிடம் விபரம் கோரினேன். இந்த ஆலயப் பணிக்கே தம்மை அர்ப்பணம் செய்து கொண்ட நீண்டகால அனுபவமும், ஆற்றலும், செயலாக்கத் திறனும் கொண்ட சிவத்திரு A.K.K. கருப்பசாமி செட்டியார் அவர்கள் மிகுந்த அக்கரையுடன் பல்வேறு வரலாற்று விபரங்களை அனுப்பி உதவினார்கள். ஏற்கெனவே திரு. V.K. குழந்தைவேல் செட்டியார் அவர்கள் எழுதிய நூலை திரு. P.T.A.T. நடராஜன் செட்டியார் அவர்களும், திரு. A.R.C.R. பொன்னம்பலம் அவர்களும் அனுப்பியது மிகவும் பயன்பட்டது. கடமை என ஏற்றுச் செய்த இவர்களுக்கு நன்றி என்ற ஒற்றைச் சொல் போதுமானதாகுமா?

எழுதியவன் பேசுகிறேன் என்று கூறிவிட்டு 'கவித்தென்றலே' என என்னை இனிமையாக அழைக்கும் திரு. A.K.K. சாமிநாதன் செட்டியார் அவர்களைப் பற்றி கூறாது நின்றால் நான் நன்றி மறந்தவனாவேன். எனது ஆன்மீகப் பணிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து அடிக்கோடிட்டுக் காட்டிய இப்பெருமகனாரை வாழ்த்த வயதில்லை; வணங்கி மகிழ்கிறேன்.

இந்நூல் எழுதும் போது ஆர்வத்துடன் விபரம் கேட்டு ஊக்கப்படுத்தியதுடன் பாடல் அமைப்பிலும் தக்கவாறு கருத்துக்களைத் தெரிவித்துதவிய நம்மவரான சித்தாந்த ரத்தினம், புலவர் சிவத்திரு K.A. இராசு M.A., M.Ed., அவர்களுக்கு எனது இனிய நன்றியினை உரிமையாக்குகிறேன்.

விநாயகப் பெருமானின் மாண்பினை அனைவரும் உணர்ந்து, உள்ளம் உருகதுதித்து, இம்மை மறுமை இரண்டிலும் செம்மையுற்றோங்க வேண்டுமென்ற ஆசை காரணமாக இந்நூல் வெளியிடப்படுகிறது.

தெய்வீகம் என்ற தென்றலை அனுபவியுங்கள். உங்களைத் தேடிவரும் நன்மைகளை என்னோடும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இந்நூலினைச் செவ்வனே அச்சிட்டு, காலத்தில் எமக்களித்த ஸ்ரீ சத்யா எண்டர்பிரைஸஸ் நிறுவனத்தாருக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

என்றும் அன்புடன்,
கே.ஏ. சீனிவாசன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

பாலக்காடு

அருள்மிகு விற்றுணி விநாயகர் திருக்கோயில்

வரலாறு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் – கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா.

எம்மாம்பூண்டியார் வரலாறு

இற்றைக்கு சற்று ஏறக்குறைய முந்நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஈரோடு மாவட்டம் நம்பியூர் ஒன்றியத்தைச் சேர்ந்த எம்மாம்பூண்டி என்ற சிற்றூரில் வாழ்ந்து வந்த திரு. சின்னாஞ்செட்டியார் என்பவர் புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவராவர். தமது முப்பதாவது வயதில் திருமணம் கொண்ட இவருக்கு ஆண் மகவு பிறந்தது. குழந்தைவேல் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். இக்குழந்தையே எம்மாம்பூண்டியார் குலம் விளங்க வந்த அருட் குழந்தையாகும்.

குழந்தைவேல் பிறந்ததிலிருந்து இக்குடும்பத்தில் வாணிபத் தொழில் இறையருளால் பெருகி வளர்ந்தது. குழந்தைவேல் பதினெட்டு வயது எய்தும் சமயம் தந்தை திரு. சின்னாஞ் செட்டியார் இறைவன் திருவடி நிழல் பெற நேரிட்டது. அந்த இளம் வயதில் தந்தையார் செய்து வந்த தொழிலை தாம் மேற்கொண்டு தமது தீவிர உழைப்பில் பெரிதும் முன்னேற்றம் கண்டார். தந்தையார் தோள் சுமையாக புகையிலை சுமந்து செய்து வந்த வணிகத்தை திரு. குழந்தைவேல் செட்டியார் தமது 25-வது வயதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதிமாடுகளில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாலக்காடு அடைந்து விரிந்த அளவில் வியாபாரம் செய்தார். இதுசமயம் இவருக்கு ஒரு லட்சம் வராகன் பொருள் கிடைத்தது என்பர். இதனால் இவரது பேரும் புகழும் கூடவே வளர்ந்தன. பாலக்காட்டில் தங்கி தொழிலைக் கவனித்து வந்த இவருக்கு தக்க நண்பர் ஒருவர் கிடைத்தார். அவர் அனைத்து சரக்குகளைக் கொள்முதல் செய்தும், தேவையான பிற உதவிகள் செய்தும் பெருந்துணையாக இருந்தார். அப்போது இவர்கள் பாலக்காட்டில் தங்கியிருந்த இடம் தற்போது விற்றுணியார் கோயிலின் அலுவலக அறையாகத் திகழும் இடமேயாகும். இந்நிலையில்தான் விநாயகப் பெருமானின் வெளிப்பாடு சித்திக்கத் துவங்கியது.

விற்றுணிப்பிரான் கனவில் தோன்றியருளியது

ஒருநாள் செட்டியார் அவர்கள் பகல் உணவிற்குப் பின் அயர்ச்சி காரணமாக தன்னை மறந்து தூங்கினார். அப்போது ஒரு சிறுவன் வந்து "அப்பனே! நான் உன் அருகிலேயே குடியிருந்து வருகிறேன். ஆயினும் என்னை வந்து பார்க்கவில்லையே! ஏன்? என்று கூற அக்குரல் கேட்டு விழித்து எழுந்தார். யாரையும் காணவில்லை. சுற்றும் முற்றும் ஓடிப் பார்த்தும் குரல் கொடுத்த சிறுவனைக் காணாது திகைத்தார். தமது சமையற்காரரைக் கேட்க அவரும் புரியாது நின்றார். இந்த விந்தை நிகழ்வை நினைத்தவாறே பகற்போது கழிய இரவு துயில் கொண்டார்.

தூங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் பகலில் கண்ட அதே சிறுவன் செட்டியாரை அழைத்துச் சென்று இப்பொழுது விற்றுண்ணி விநாயகர் எழுந்தருளியுள்ள இடத்தைக் காட்டினார். ஓலையால் வேயப்பட்ட சிறு கோயில் விநாயகர் திருமேனி கொண்டிருந்தார். இதனைக் கண்டு திரும்பினார். உடன் வந்த சிறுவனைக் காணவில்லை. திடுக்கிட்டு எழுந்தார். கண்டது கனவு என உணர்ந்தார். உடனே சமையற்காரரை அழைத்து இந்த அற்புத நிகழ்வினைக் குறிப்பிட்டார்.

மறுநாள் அதிகாலை எழுந்து நீராடி நித்தியகர்மம் முறையாகச் செய்துவிட்டு கனவில் கண்ட இடம் நோக்கிச் சென்றார். கனவில் இருந்தபடியே ஓலைக் கூரையில் விநாயகர் நனவாக இருப்பது கண்டு பெருமகிழ்வுற்று ஆனந்தக் கூத்தாடினார். விநாயகரின் திருவருளை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நினைத்து இதனை தாம் பெற்ற பெரும் பேறாகக் கருதி உள்ளம் உருகினார். கனவில் வந்து காட்சி தந்த சிறுவன் விநாயகப் பெருமானே என உணர்ந்து உள்ளம் பூரித்தார். உடனே குடிசையில் குடிகொண்ட விநாயகருக்கு கோயில் எடுக்க நினைத்தார்.

ஓங்கி வளர்ந்த தென்னைகள் பலாவுமாகச் செறிந்து நின்று எங்கும் பசுமையான இயற்கை எழில் பொங்கிடும் சோலை நடுவே தாமரைத் தடாகத்தின் அருகே வேழமுகத்தான் குடியிருந்தது செட்டியார் அவர்களைப் பெரிதும் ஈர்த்தது. திருக்கோயில் கட்ட தீவிர முனைப்புடன் செயலில் இறங்கினார். இச்சோலை யாருடையது என விசாரித்த போது தமக்கு உதவி வரும் உற்ற நண்பருக்குச் சொந்தமானது என்பதை அறிந்து பெருமகிழ்வுற்றார். 300 வராகன் கொடுத்து இவ்விடத்தை வாங்கினார்.

விநாயகர் இருந்த அந்த இடத்திலேயே பெருங்கோயில் எழுப்பி நல்ல நாளில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்து நல்லோரையில் கும்பாபிஷேகமும் செய்து நித்தமும் நியமமாக வழிபட்டுக் கொண்டிருந்தார்.

விற்றுணியார் கோயில் கட்டியது முதல் செட்டியார் அவர்களின் தொழில் பெருமளவு முன்னேற்றம் கண்டு எதிர்பாராத கணிசமான வருவாய் பெருகியது. இதனால் மகிழ்வும் வியப்பும் கொண்ட இவர் விநாயகரின் திருவருளை நினைந்து போற்றிப் புகழ்ந்தார். இவரது புகழும் ஓங்கியது.

நித்திய வழிபாட்டிற்கு நிரந்தர வழிகாண நன்செய் நிலங்களுக்கு வழிவகை செய்ய எண்ணினார். நல்லோரின் எண்ணத்தைச் செயல்படுத்த இறைவன் என்றும் சித்தமாக இருப்பான் என்ற கருத்து வலிவுபெற்று பொலிவுறும் வகையில் அந்த விநாயகப் பெருமானே வழிகாட்டினார்.

மைசூர் மன்னனின் நட்பு

ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் மைசூரை ஆட்சிபுரிந்த சமயம் ஆங்கிலேயரோடு பலமுறை போரிட நேர்ந்தது. வணிகத்திற்கு வந்த வெள்ளையர்கள் நம்மிடையே பிளவினை ஏற்படுத்தி நாட்டை ஆளத் தொடங்கியதை எதிர்த்து ஹைதரும் அவரது மகனான திப்புவும் அவர்களைத் துரத்த பெருமுயற்சி எடுத்து கடும் போரிட்டனர். பலமுறை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போரிட்டதால் செல்வம் சுருங்கி மீண்டும் போரிட நிதிவசதியின்றி வருந்தினர். இந்நிலையில் "நம் குடிமக்களில் யாரேனும் பொருள் தந்து உதவும் வகையில் உளரோ" என தமது அலுவலர்களைக் கேட்க, அதற்கு "எம்மாம்பூண்டியில் ஒரு பெருந்தனக்காரர் உள்ளார் அவரைக் கேட்டால் ராணுவச் செலவுக்குப் பணம் கிடைக்கும். அவர் பெயர் திரு. குழந்தைவேல் செட்டியார்" என்றனர். நாட்டை ஆளும் மன்னன் குழந்தைவேல் செட்டியார் அவர்களின் வீட்டை நோக்கி வந்தார். இது இக்குடிமகனார்க்கு மட்டுமல்ல அவர் வழித்தோன்றல்களாகிய நமக்கும் பெருமையன்றோ!

வருகை தந்த மன்னரைத் தக்கவாறு உபசரித்து வந்த காரியம் அறிந்து ராணுவச்செலவுக்குப் பணம் கொடுக்க செட்டியார் இசைந்தார். "எவ்வளவு பணம் தங்களிடத்தில் உள்ளது என மன்னன் வினவினார். அதற்குச் செட்டியார் அவர்கள் "எம்மிடத்தே உள்ள எந்த நாணயங்கள் கொண்டும் என் வீட்டிலிருந்து தங்கள் அரண்மனை வரை சால்விட்டுச் செல்ல இயலும்" என்று மறுமொழி புகன்றார். (சால் விடுதல் என்பது ஏர் உழுத சாலில் விதை தெளிப்பது) இதனை அரசன் கேட்டு ஆச்சரியப்பட்டு "இத்தகைய செல்வந்தரை இதுவரையும் கண்டதில்லையே" என நினைத்து புன்முறுவல் பூத்தார். வேண்டிய பொருள் பெற்றுச் சென்று ஆங்கிலேயரோடு மீண்டும் போர் புரிந்து வெற்றியும் கண்டனர். ஆங்கிலேயர்கள் தோல்வியுறும் சமயத்தில் தந்திரமாகச் சமாதானம் செய்து கொண்டனர்.

அரசனது வெற்றி விழா

மைசூர் அரண்மனையில் சிறப்பான வெற்றிவிழா கோலாகலமாக நடைபெற்றது. திரு. செட்டியார் அவர்களுக்கு சிறப்பு அழைப்பு வந்தது. அரண்மனையில் முக்கிய சிறப்பு விருந்தினராகத் தங்கச் செய்து அனைத்து சிறப்புக்களும் செய்தனர். பின் ஊர் திரும்பும் நாளில் தமக்குச் செய்த உதவிக்காகப் பிரதி உபகாரமாக யாது செய்ய வேண்டுமென மன்னன் கேட்க, செட்டியார் அவர்கள் திருக்கோயில் பராமரிப்புக்கான விளைநிலம் தேவை பற்றிய தமது நீண்டநாள் எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மைசூர் மன்னனிடம் விளைநிலம் பெறல்

விற்றுணியாருக்கு நித்திய நிமித்தங்கள் நிரந்தரமாக நடைபெற போதிய நஞ்சை நிலங்களின் தேவை பற்றி உணர்த்தினார். மன்னர் திப்புசுல்தான் இதற்கு மகிழ்வுடன் இசைந்து தாமே தன் பரிவாரங்களோடு விற்றுண்ணி வந்து வேண்டும் நிலங்களுக்கு எல்லை காட்ட வேண்டினார். அவர்களும் எல்லை காட்ட அப்போதே அந்நிலங்கள் யாவற்றையும் விற்றுண்ணிப்பிரான் பேரால் பட்டா செய்து "ஸ்ரீ விற்றுண்ணியார் தேவஸ்தம் (தேவசம்) ஜம்மி" என்னும் பெயர் தந்து மன்னர் விடைபெற்றுச் சென்றார். அப்பொழுது பெற்ற நிலங்கள், தற்போதுள்ள வயல் நிலங்களும், தென்வடலில் கோட்டை வரையிலும் தற்போதுள்ள கடைத்தெரு வரையிலும் என்று கூறுவர். (காலமாறுபாட்டாலும், கேரள நாட்டுச் சட்டங்களாலும் பாதிக்கப்பட்டு எஞ்சிய நிலங்களே தற்போது உள்ளன.)

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் ஐநூற்றுவர் யாவரும் எம்மாம்பூண்டியார் வகையைச் சார்ந்தவர் என்று பெருமிதத்தோடு கூறிவந்தனர். தேவஸ்தானம் நிலை உயர்ந்தது முதல், ஐநூற்றுச் செட்டியார்கள் யாவரும் வியாபார நிமித்தம் பாலக்காடு சென்று பலமாதங்கள் தங்கி வந்தனர். தேவஸ்தான காரியங்களில் செட்டியாருக்கு உதவியாக இருந்து வந்தார்கள். காலக் கிரமத்தில் பொது மக்களே அன்றி பெருந்தகை செட்டியார் அவர்களும் "தேவஸ்தானம் ஐநூற்றார் தமக்கும் சொந்தமானது" என்று கூறினார்கள். அவ்வாறே பின் ஸ்ரீ விற்றுண்ணியார் தேவஸ்தானம் எம்மாம்பூண்டி ஐநூற்றார்கள் மேற்பார்வைக்கு வந்து சேர்ந்தது. ஐநூற்றார் அனைவரும் சேர்ந்து அமைத்த நிர்வாகக் குழு இத்தேவஸ்தானத்தை இதன்பின் பராமரித்து வருகிறது.

1918–ம் ஆண்டில் நிர்வாகக் குழுவின் தலைவராக இருந்த அமரர் பெ.சா.ந. சாமு செட்டியார் அவர்களது அறிக்கையின்படி விளைநிலம் சுமார் 120 ஏக்கர் இருந்தது எனத் தெரிய வருகிறது. இன்று திருக்கோயிலும் சுற்றி எஞ்சியுள்ள சில குறுகிய இடங்களும், மடம், சில கட்டிடங்கள் சுமார் 2 ஏக்கர் பரப்பில் திருக்குளமும் மட்டுமே பராமரிப்பில் உள்ளதாக திருக்கோயில் திருப்பணிக்குழு 1995–ம் ஆண்டு வெளியிட்ட வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருக்கோயில் மூர்த்திகள் பெருகிய வரலாறு

முதன் முதலில் திரு. குழந்தைவேல் செட்டியார் அவர்கள் விநாயகப் பெருமானுக்கு கோயில் அமைத்தார்கள். பின்னர் இவரது வழித்தோன்றல்களாக வந்தவர்கள் காசியம்பதி சென்று அங்கிருந்து சிவலிங்கம் கொண்டு வந்து, ஸ்ரீ விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதரை பிரதிட்டை செய்து கோயில் கட்டு வித்தார்கள். இதனை அமைத்தவர் யார் என அறிய இயலவில்லை. அப்பெரியோர்களின் திருவடி தொழுது நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேற்கூறிய காசி விஸ்வவேஸ்வரர் – விசாலாக்ஷி சன்னதிக்கு தேக்குமரத்தால் கட்டுக்கோப்புவேய்ந்து திருப்பணி செய்தவர் பெ.ச. மாரப்ப செட்டியார் அவர்களாவார்.

அதன்பின் இன்றைக்கு 155 ஆண்டுகளுக்கு முன்பு கருணைபாளையம் திரு. சுப்பராய செட்டியார் அவர்கள் ஸ்ரீ வள்ளி தெய்வயானை உடனமர் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் கோயிலைக் கட்டுவித்தார்கள். சுமார் 85 ஆண்டுகளுக்கு முன்பு வேலம்பாளையம் திரு. A.K. பொன்சிவளை செட்டியார் அவர்கள் நவக்கிரக பிரதிட்டை செய்து மகிழ்ந்தார். 1968 குடமுழுக்கு சமயம் சனீஸ்வரப் பெருமான் சன்னதி அமைக்கப் பெற்றன. இவ்வாறான திருப்பணிகள் செய்த பெரியோர்களின் திருநாமம் போற்றி அன்னவர்களின் குடும்பத்தார் அனைவருக்கும் தெய்வத் திருவருள் என்றும் நின்று நிலவ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

விற்றுணியாரின் கருணைப் பெருக்கம்

சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னால் கருக்கம்பாளையம் கா.மு. வகையினர், அதாவது K.L., S.K.A., A.K.V. இவர்கள் மூதாதையர்கள் மும்பையில் வியாபாரம் செய்து வந்தனர். ஒரு சமயம் மும்பையிலிருந்து பாய்மரக் கப்பலில் சரக்குகள் வந்து கொண்டிருந்தன. கரை சேருமுன்னர் பெரும் புயல் ஒன்று வந்தது. எல்லோரும் என்ன செய்வது என்று புரியாது மனம் பதைத்து நின்றனர். கப்பலை நடத்தும் மாலுமி எல்லோருக்கும் ஓர் எச்சரிக்கை விடுத்தார். "ஆபத்து வருகின்றது. இது மனித முயற்சியால் தவிர்க்க இயலாததொன்று. எனவே தங்கள் தங்கள் குலதெய்வத்தை வேண்டிக் கொள்ளுங்கள்" என்றார்.

CC-0. In Public Domain: Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அது கேட்ட கா.மு. வகைப் பெரியவர்கள் பரம கருணாநிதியாகிய ஸ்ரீ விற்றுணியாரை வேண்டிப் பிரார்த்தனை செய்து கொண்டனர். அடியவரின் சரணடைந்த வேண்டுகோளை ஏற்ற விநாயகப் பெருமான் திருவருளின் கருணையினால் புயல் நின்றது, கப்பலும் கரை சேர்ந்தது. உயிரையும், உடமையையும் காத்தருளிய கணபதிக்கு பொன்னால் செய்த கண்டசரம் என்னும் ஆபரணத்தை பரிவன்போடு சாத்தி மகிழ்ந்தனர்.

'ஓம்' கார நாதனே கணபதியான விற்றுணியாராக இருப்பதால் முழுமுதற் கடவுளை நினைத்தே அனைத்து செயல்களும் துவங்கப்படுகின்றன. அட்டியின்றி செயலாக்கம் பெறுகின்றன. எனவேதான் நமது குலத்தவர் எது துவங்கினாலும் ஸ்ரீ விற்றுணியார் துணை என துவங்குகிறோம். தொழில் துவங்கினால் விற்றுணியார் வரவு வைத்தே புது கணக்கு எழுதப்படுகின்றது. ஸ்ரீ விற்றுணிப் பெருமானை சேவித்தவர் கோரிக்கை அனைத்தும் நிறைவேறி மகிழ்கின்றனர். நீண்டநாள் தடைபட்டு இருந்த நற்காரியங்கள் விரைவில் நடைபெறுகின்றன. நம்பிக்கையுடன் வைக்கும் வேண்டுதல்களை இந்த தும்பிக்கையாழ்வார் ஏற்று அருள்பாலிக்கின்றார்.

எந்தவொரு திருக்கோயிலும் நின்று, நீண்ட காலம் பிரசித்தி அடைந்து எல்லோராலும் ஈர்க்கப்படுகிறதென்றால் அந்த திருக்கோயில் அமைந்த இடத்தில்; கோயில் வளாகத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் ஒரு ஜீவன் முக்தரின் ஆன்மா அடங்கி இருக்கும். ஸ்ரீ விற்றுணி விநாயகப் பெருமானின் கருவறையிலேயே ஓர் ஜீவன் முக்தர் அடங்கி அருள்பாலிப்பது மிகச் சிறப்பானதாகும். சிவலிங்க வடிவமைத்து பூஜை நடைபெற்று வருகிறது. இதனால் இங்கு இறைத்தன்மை பல்கிப் பெருகி பக்தர்களை ஈர்க்கின்றது. அண்மையில் ஐநூற்றுவர்களது முன்னேற்றத்தில் தொய்வு ஏற்பட்டதாக பலரும் சிந்தித்த காரணத்தால் இது குறித்து தக்கவாறு ஆலோசித்து சமூகத்தினர் நலமும், சீலமும், மேம்பாடும் கருதி கேரள நாட்டு ஆசாரப்படி அஷ்டமங்கல தேவப்பிரசன்னம் வல்லுநர்களைக் கொண்டு நடத்தி விதாயம் கண்டு, ஜோதிட நிபுணர்களால் கணிக்கப்பட்ட உரிய பிராயச்சித்தங்கள் செய்து மகாகும்பாபிஷேகம் 1997–ம் ஆண்டில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதன் பயனாக கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐநூற்றுவர் சமூகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுவதாக அனைவரும் உணருகின்றனர். பல்வேறு தொழில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பல துறைகளிலும் படித்துப் பயின்று பட்டம் பெற்ற இளைய தலைமுறையினர் மிகச் சிறந்த வளர்ச்சி கண்டுள்ளனர். ஒரு காலத்தில் பாய்மரக் கப்பல்களில் சரக்கு ஏற்றிச் சென்றவர்கள் இன்று விமானங்களிலும், கப்பல்களிலும் அயல்நாட்டுக்கு நம்நாட்டுப் பொருட்களை ஏற்றுமதி செய்து இந்திய நாட்டின் பொருளாதாரத்தையே உயர்த்தும் வகையில் அன்னியச் செலவாணியை செழிப்பாக்கி வருகின்றனர். பல்வேறு நாடுகளிலும் ஐநூற்று இன்த்தவர் பெரும் நிபுணத்துவம் வாய்ந்த பதவிகளில் பொறுப்பாகப் பணியாற்றி நமது பெருமையினை உயர்த்தி வருகின்றனர். இவையனைத்தும் விற்றுணியாரின் கருணைப் பெருக்கத்தின் காரணமேயாகும் என நம்பப்படுகிறது.

பரசுராம ஷேத்திரமான மலையாளத்தில் 27000 பகவதி கோயில்கள் உள்ளன. இதர திருத்தெய்வங்கட்கான கோயில்கள் இதனை ஒப்பிடும்போது மிகக் குறைவானதேயாகும்.

கேரளத் திருக்கோயில்கள் என்ற தலைப்பில் திரு. பரணீதரன் எழுதிய வரலாற்றுத் தொகுப்பில் விற்றுணியார் திருக்கோயிலில் சனீஸ்வரனுக்கு தனி சந்நிதி அமைந்திருப்பது சிறப்பானதாகும் என குறிப்பிட்டுள்ளார். சனிப்பீதி செய்து பயனடைவோர் இங்கு ஏராளமாக வந்து செல்கின்றனர். இதனாலும் இத்திருக்கோயில் இப்பகுதி மக்களிடையே முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

விக்கினங்களைத் தீர்க்க வல்ல ஸ்ரீ விற்றுணியார் துணை என்றே நாம் திருமணப் பத்திரிகையிலிருந்து அனைத்து மடல்களிலும் குறிப்பிட்டு வருகிறோம். தொழில் துவங்கும் போது ஸ்ரீ விற்றுணியார் வரவு குறிப்பிட்டே புதுக் கணக்குத் துவங்கப்படுகின்றது. கேரள மக்கள் பழநி முருகனுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல வேண்டுதல்கள் நிறைவேற்றி வருகின்றன. அதன் தொலைவு பற்றிய கருத்தில் இங்குள்ள ஸ்ரீ சுப்பிரமணியர் அவர்களது தாபங்களைத் தீர்க்கும் வடிகாலாக அமைந்து அருள் பாலித்து வருகிறார்.

ஜோதிட சாஸ்திரத்தில் அதிக நம்பிக்கை கொண்ட இப்பகுதி மக்கள் தங்களது ஜாதக ரீதியில் ப்ரீதி செய்து நவநாயகர்களைத் திருப்திப்படுத்த இங்கு வருகின்றனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு பலதரப்பட்ட மக்களின் பல்வேறு கோரிக்கைகளும் இங்குள்ள திருத் தெய்வங்களின் கருணைப் பார்வையருளால் நிறைவேறி மக்கள் மனது மகிழ்வால் நிரம்புகிறது. நம்பிக்கையோடு வரும் அடியவர் திருக்கூட்டத்தில் அனைத்து விக்கினங்களும் தீர்த்து வைக்கும் விற்றுணி விநாயகப் பெருமான் நம்மையும் அருள்பாலித்துக் காப்பான் என நம்பிச் செயல்படுவோமாக.

கோயில் திருப்பணிகள் மற்றும் கும்பாபிஷேகம்

1925-ம் ஆண்டு ரூ. 5000/- செலவில் கீழ்வரும் குழுவினாரால் கும்பாபிஷேகம் நடைபெற்றது. (இதற்கு முந்தைய ஆண்டுகள் நடைபெற்ற விபரங்கள் அறிய இயலவில்லை)

குழுவினர் வருமாறு :

திரு. பெ. சா.ந. சாமு செட்டியார்
திரு. A.R. சொக்கலிங்கம் செட்டியார்
திரு. பெ.சா.சி. பழனியப்ப செட்டியார்
திரு. A.K. பொன்சிவளை செட்டியார்
திரு. அ.வி.ப. அவிநாசிலிங்கம் செட்டியார்
தெற்குவளவு திருமதி விசாலாசுஷி அம்மாள் ஆகியோராவர்.

இதனையடுத்து தேவஸ்தானத்தின் மேற்பார்வை கீழ்வரும் குழுவினரிடம் வந்து சேர்ந்தது.

திரு. A.P. அப்பண்ணன் செட்டியார்
திரு. A.P. அருணாசலம் செட்டியார்
திரு. A.K. காளியப்ப செட்டியார்
திரு. S.K. அவிநாசிலிங்கம் செட்டியார்
திரு. K. சாமிநாதன் செட்டியார்
திரு. A.R.C. இராமலிங்கம் செட்டியார்
திரு. C.P. சுப்பிரமணியம் செட்டியார்

இவர்கள் காலத்தில் தேவஸ்தானத்திற்குப் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. திரு. A.R.C. இராமலிங்கம் செட்டியார் மகாசபைத் தலைவராக இருந்த காலத்தில் திருப்பணி விரிவாக நடைபெற்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இத்திருப்பணியைத் திறம்பட நடத்தி வைத்த குழுவினர்கள் :

தலைவர்	:	திரு. A.P.G. முருகேசன் செட்டியார்
உபதலைவர்கள்	:	திரு. S.K. அவிநாசிலிங்கம் செட்டியார்
		திரு. V.S.C. சுப்பராய செட்டியார்
		திரு. A. சாமிநாதன் செட்டியார்
செயலாளர்கள்	:	திரு. A.K.K. சாமிநாதன் செட்டியார்
		திரு. K.L. பழனியப்ப செட்டியார்
பொருளாளர்	:	திரு. A.R.C. இராமலிங்கம் செட்டியார்

இக்குழுவினர் முயற்சி சிறந்த பாராட்டுக்குரியதொன்றாகும்.

எல்லாப் பெருமக்களின் நல்லாதரவாலும் பேருழைப்பாலும் திருப்பணி செம்மையாக நடந்து கும்பாபிஷேகம் கீலக ஆண்டு சித்திரைத் திங்கள் 28-ம் நாள் 10.5.1968ல் திருமுறை வேதபாராயணங்களுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஐநூற்றுச் செட்டியார் வரலாற்றில் இவ்விழா பொன்னழுத்தால் பொறிக்கத்தக்கது என்றால் மிகையாகாது. நம் இனத்தவர் என்றல்லாது அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்ற நிகழ்ச்சி இது. கும்பாபிஷேகம் நடந்த அன்று மட்டும் 5000 பேர்கள் உணவு பெற்றனர் என்பதும் ஆயிரம் வேத விற்பன்னர்களுக்கு மகேஸ்வர பூஜை நடந்தது என்பதும் இவ்விழாவின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும்.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் சிவத்திரு. A.P.G. முருகேசன் செட்டியார் அவர்களின் வேண்டுகோளின்படி வேலம்பாளையம் திரு. V.K. குழந்தைவேல் செட்டியார் அவர்கள் 1968 கும்பாபிஷேக சமயம் வெளியிடப்பட்ட நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். மிகப்பெரிய செயலாற்றல்மிக்க தமிழறிஞர் என்பது அவரது எழுத்துக்களின் உயிரோட்டம் மிக்க கருத்துக்களில் நமக்குத் தெளிவாகிறது. அவர் நூல் கிடைப்பது அரிதாக இருப்பதால் இதனை அதன் மறுபதிப்பாகவே கொள்ளலாம்.

இதன்பின் 1983-ம் ஆண்டில் திரு. A.K.K. கருப்புசாமி செட்டியார் மகாசபைத் தலைவராக இருந்த சமயம் சிவத்திரு. வெங்கடாசலம் செட்டியார் தலைமையில் அமைந்த திருப்பணிக் குழுவினரால் மீண்டும் புனருத்தாரணம் செய்து மேற்கு நுழைவாசல் அமைக்கப்பெற்று பொலிவுடன் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதனையடுத்து ஏற்கெனவே குறிப்பிட்டவாறு அஷ்டமங்கல தேவப்பிரசன்னம் நடத்தியதில் கூறப்பட்ட 14 வகைப் பரிகாரங்களும் நல்லமுறையில் வேத விற்பன்னர்களைக் கொண்டு செய்வித்து ரூ. 19,77,439/-செலவில் அனைத்து சன்னதிகளும் புதுப்பிக்கப் பெற்று, தக்கவாறு நவீனப்படுத்தி 25.6.1997 புதன்கிழமை ஜீரணோத்தாரண மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்திருப்பணி குடமுழுக்கு விழா குழுவினர்:

தலைவர்	:	திரு. A.K.K. கருப்புசாமி செட்டியார், எர்ணாகுளம்
உபதலைவர்கள்	:	திரு. A.T.M. அண்ணாமலை செட்டியார், அவிநாசி
		திரு. P. சுப்பிரமணியம் செட்டியார், சென்னை
		திரு. P. இராமலிங்கம், திருப்பூர்
		திரு. P.S.A.P. சீனிவாசன், கோவை
செயலாளர்கள்	:	திரு. S. ஆறுமுகம், திருப்பூர்
		திரு. M. ராஜமாணிக்கம், திருப்பூர்
		திரு. C. ரத்தினம், கோபி
பொருளாளர்	:	திரு. A.R.CA. ராஜமாணிக்கம், கோவை

இப்பெரும் பணியினைத் திறம்பட நடத்தி வைக்க அனுபவமும் ஆற்றலும் மிக்க பல பெரியோர்கள் ஆலோசகர்களாக இருந்துள்ளனர். கட்டிடக் கலைக்கென்றே படித்துப் பட்டம் பெற்ற பொறியியல் வல்லுநர்கள், குழுவின் ஆக்கப் பணிக்கு ஊக்கமளித்து உதவும் உறுப்பினர்கள், நிதி வசூல் பொறுப்புக்கென உறுப்பினர்கள் என்றும் நீண்ட பட்டியல் அவர்கள் ஆர்வம் மிக்க இத்திருப்பணிக்குத் தம்மை அர்ப்பணம் செய்து கொண்டதை வெளிப்படுத்துகிறது. இதனை இங்கு நினைவு கூர்வது மிக்க பொருத்தமானதும், நமக்கெல்லாம் பெருமை வாய்ந்ததாகவும் இருக்கிறது.

இச்சமயம் எம்மாம் பூண்டிவகை ஐநூற்றுச் செட்டிமார் மகா சபையின் பொறுப்பாளர்கள்:

தலைவர்	:	திரு. K. சண்முகம் செட்டியார், சூலூர்
உப தலைவர்	:	திரு. A.R.C.R. பொன்னம்பலம், எர்ணாகுளம்
செயலர்	:	திரு. R. கனகரத்தினம், கோவை
உதவிச் செயலர்	:	திரு.RM. பாலதண்டபாணி, கோவை
பொருளாளர்	:	திரு.A.R.CA. ராஜமாணிக்கம், கோவை ஆகியோர் ஆவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேற்கூறிய பெரியோர்கள் மிக்க ஈடுபாடு கொண்டு எடுத்த முயற்சி காரணமாக குடமுழுக்கு விழா பெரும் பொருட் செலவில் இனிதே நடைபெற்றது. அனைவரின் ஒத்துழைப்பும் இருக்குமேயானால் எதுதான் இயலாது என்ற வினா நம்மவர்களின் நல்ல உள்ளத்தின் சீரிய சிந்தனையில் எழுகிறது.

விழாக்கள் மற்றும் சிறப்பு வழிபாடுகள்

நமது விற்றுணியார் கோயிலில் ஆண்டுதோறும், தமிழ்ப்புத்தாண்டு சித்திரை முதல் நாளில் விஷு புண்ணியகாலம் அதிகாலை சிறப்பு அபிஷேகத்துடன் நடைபெறுகிறது. வைகாசியில் விசாகத் திருநாள் கொண்டாடப் பெறுகிறது. ஆனி மாதம் கும்பாபிஷேக நினைவு நாள் ஸம்வத்ஸராபிஷேகத்துடன் நடத்தப் பெறுகின்றது. ஆவணி மாதம் திருக்கோயில் மூல மூர்த்தியின் முக்கிய நாளான விநாயகர் சதுர்த்தி மற்றும் ஓணம் திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. புரட்டாசி மாதம் நவராத்திரி விழா நம்மவர் மகளிர் பெரும்பங்கேற்று ஆர்வத்துடன் அற்புதமாக மிகுந்த சிரத்தையுடன் நடத்தி வருகின்றனர். முன்னாட்களில் பெண்கள் பங்கேற்று முதலிடம் வகித்து விழா எடுப்பது மிக அரிதாக இருந்தது. ஆனால் தற்போது தாங்களே முன்னின்று பகவதி ஷேத்திரமான சக்தியின் ஆதிக்க பீடத்தில் ஒன்பது நாட்களும் பராசக்தியை ஒவ்வொரு வடிவமாக பாவித்து விழா முடிப்பது மிகச் சிறப்பான பலன்களைத் தரும் நிகழ்ச்சியாகும். இது காரணமாகவே விற்றுணியார் மற்றுமுள்ள திருத்தெய்வங்களின் பாடல்களுடன் "நவராத்திரி நாயகி" என்ற தலைப்பில் சக்தி வழிபாட்டின் சிறப்பைக் காட்ட ஒன்பது பாடல்களும் எழுதி சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் அன்னிய ஆதிக்க சக்தியை விரட்டியடிக்க ஆங்கிலேயருடன் போர் புரிந்த மைசூர் மன்னருக்கு நிதியுதவி செய்து தம் நாட்டுப்பற்றினை வெளிப்படுத்திய திருக்கோயில் நிறுவிய திரு. குழந்தைவேல் செட்டியார் அவர்களின் வழித்தோன்றல்களாகிய நாமும் நமது நாட்டுணர்வைக் காட்டும் வகையில் நாட்டுக்கு விடுதலை வாங்க முழுமுதற் காரணமாக இருந்த "மகாத்மா காந்தியடிகளின்" ஜெயந்தி நாளினைக் கொண்டாடிச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறப்பிக்கும் வகையில் அன்றைய தினம் கணபதி ஹோமம் மற்றும் சிறப்பு பூஜையும் செய்து மகிழ்கிறோம். இது சாதாரணமாக மற்றைய திருக்கோயில்களில் அமையாத ஒன்றாகும்.

ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி விழா (சூரசம்ஹாரம்) சிறப்பாக நடைபெறுகின்றது. மேலும் இம்மாதத்தில் நடைபெறும் அன்னாபிஷேகம் விழா மிகத் தொன்மை வாய்ந்ததும், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதுமாகும். மற்றைய விழாக்களை விட இதற்கு அடியவர் திருக்கூட்டம் அதிகமாக இருக்கும். அன்னம்பாலிக்கும் விழாவில் ஐநூற்றார் பெரும் ஆர்வத்தோடு கலந்து கொண்டு தங்களால் இயன்ற நிதி, பொருளுதவியைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். "வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்" என்ற மனிதக் கோட்பாடு வரிகள் மனதில் நிழலாடிச் செல்கின்றது.

கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை தீப விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. இறைவன் ஜோதி சொரூபமாக நின்று நமது பாபங்களைச் சுட்டெறித்துக் களைந்து ஜீவாத்மா பரமாத்மாவோடு கலந்து உய்வுறுவதை நினைவுக்குக் கொண்டுவரும் திருநாளாகும் இது.

மாதங்களில் நான் மார்கழி என்று பரம்பொருள் கீதையில் கூறுகின்றார். மார்கழி குளிரில் உதயத்திற்கு முன்னரே எழுந்து குளிர்ந்த நீரில் நீராடி எம்பெருமான் கருணையினைப் பேசியும், பாடியும் வணங்குதல் வைணவ மற்றும் சைவ சம்பிரதாயமாகவே கடைப்பிடிக்கப்படுகின்றது. விஞ்ஞான ரீதியில் விடியலின் காற்றில் கலந்துள்ள 'ஓசேன்' மனதுக்கும் உடலுக்கும் இதமளிக்கிறது. ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியினைப் பாடியும், அண்ணாமலையானின் அடிக்கமலம் சென்று இறைஞ்சியும், எழில்மிகு சூரியபகவானைப் போன்று எங்களுக்கெல்லாம் நல்ல கதியினை அளித்து கடைத்தேற்ற இறைஞ்சியும், திருமாலும் நான்முகனும் அடிமுடி காண இயலாத நிலையில் அடியவர்க்கு மட்டும் பூங்கழல்கள் எனப்போற்றும் ஈடு இணையற்ற திருவடிகளை தோற்றமாகச் செய்து உய்வளித்து, ஆட்கொண்டருளும் அனைத்தும் மேலான சிவபெருமானை; மணிவாசகப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருமான் அருளிச் செய்த திருவெம்பாவையில் காண்கிறோம். இப்பாடல்களை காதில் பனிகுளிர கண்ணில் பனிபனிக்க நெக்குருகி, நெஞ்சார்ந்த பக்தியுடன் பாடி வழிபடும் மார்கழி தனுர்மாத பூஜை தவறாது செய்து வரப்படுகிறது.

மார்கழியில் திருவாதிரை ஆருத்ர தரிசனமும், ஆங்கில ஆண்டு பிறப்பு நாள் அபிஷேகமும் சிறப்புடன் நடத்தி வரப்படுகின்றன.

தைப் பூசத் திருநாளில் வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியருக்குச் சிறப்பு அபிஷேக அலங்காரம் செய்து மக்கள் மனமுருக வேண்டிப் பயனுற வழி செய்யப்பட்டுள்ளது.

மாசி மாதம் மஹா சிவராத்திரி 4 ஜாம அபிஷேகமும் லிங்கோற்பவ் கால தீபாராதனையும் உரிய நேரத்தில் செய்வித்து பக்தர்களின் உள்ளங்கள் குளிர்விக்கப்படுகின்றது.

பங்குனி மாதத்தில் யுகாதிப் பண்டிகை பாங்குடனே நடத்தி வரப்படுகிறது. மாதந்தோறும் கிருத்திகை பூஜை, சங்கடஹர சதுர்த்தி அபிஷேகம் ஆகியவை நடத்தப்பெறுகின்றன.

ஆண்டு முழுதும் ஒவ்வொரு மாதங்களிலும் நடைபெறும் உற்சவங்கள் பெரும்பாலும் சேவார்த்திகள் கட்டளையாகவே நடைபெறுவது ஐநூற்றுவர் சமூகம் இத்திருக்கோயில் தெவ்வத்தின்பால் கொண்ட ஈர்ப்பையும் ஈடுபாட்டையும் காட்டுகின்றது. செய்விக்கும் கட்டளைதாரர் அனைவருக்கும் சகல நன்மைகளும் உண்டாக நாமும் ஸ்ரீ விற்றுணியாரைப் பிரார்த்திக்கிறோம்.

பொது

நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு எம்மாம்பூண்டியிலிருந்து வியாபாரத்திற்குச் சென்ற திரு. குழந்தைவேல் செட்டியார் அவர்கள் தோற்றுவித்த விற்றுணியார் திருக்கோயில் பல்வேறு காரணங்களால் நில, நிதி வசதிகளை இழந்த நிலையிலும் நம்மவர்கள் பெரும் முயற்சியால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருப்பதை மேலும் இழக்காது காப்பாற்றி பல்வேறு முன்னேற்றம் கண்டுள்ளது நமக்கெல்லாம் பெருமையளிக்கின்றது.

இத்திருக்கோயில் மற்றைய கோயில்களிலிருந்தும் மாறுபட்ட ஒன்றாகும். இதர வகுப்பினர் கலவாது, ஸ்தாபித்தவர், முன்னேற்றப் பணிகள் மேற்கொண்டோர், கும்பாபிஷேகத் திருவிழாக்கள் நடத்தியோர், நித்திய பூஜைப் பணி, உற்சவங்கள் செய்விப்போர் அனைத்தும் ஐநூற்றுவர்களேயாகும். இத்திருக்கோயில் நமது சமூகச் சொத்து. விற்றுணியார் நமது சமூகக் கடவுள் என்ற உரிமை பாராட்டி வருகிறோம் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை. எனவேதான் நமது குலத்தைக் காக்க, சமூகத்தைக் காக்க விற்றுணியாரை வேண்டுதல் செய்து திருப்பாடல்கள் இயற்றி வரலாற்றுடன் வழிபாடாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

விற்றுணி விநாயகர் திருக்கோயில் வரலாற்றைக் கூறும்போதே இதே எம்மாம்பூண்டி கிராமத்தைச் சார்ந்த திரு. முத்துக்குமார செட்டியார் என்பவரது கனவில் முருகப்பெருமான் தோன்றியருளியதால் ஈரோடு மாவட்டம் கோபி வட்டம் நம்பியூர் ஒன்றியத்தில் உள்ள மலையப்பாளையம் என்ற சிற்றூரில் உதயகிரி மலையில் கையில் தண்டுடன் மூலவர் முருகன் அருள்மிகு முத்துவேலாயுதசாமி என்ற திருப்பெயரில் 600 ஆண்டுகட்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சித்திரை மாதம் 13, 14, 15 தேதிகளில் சூரிய உதயம் மூலவர் மீது பட்டு வருவது அற்புத காட்சியாகும். இதுவும் நம்மவர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்பதால் இங்கு நினைவு கூறப்படுகின்றது.

பாலக்காடு தேவஸ்தான அலுவலக நேரம் காலை 7.00 மணி முதல் 11.00 மணி வரை. மாலை 4.00 மணி முதல் 7.00 மணிவரையாகும். குடும்ப சகிதம் வந்து தங்கி கட்டளை, ஆராதனை, தரிசனம் செய்து போக தங்கும் விடுதி வசதியுள்ளது. நம்மவர்களின் வருகையைப் பதிவு செய்ய பதிவேடு அலுவலகத்தில் உள்ளது. புது மண மக்கள் சுற்றமும் நட்பும் சூழ ஆலயத்திற்கு வந்து வழிபட்டு ஸ்ரீ விற்றுணியாரின் திருவருளைப் பெற்றுச் செல்வதில் ஆர்வத்தோடு உள்ளனர். இம்மை நலன்கள் யாவும் பெற்று அனைவரும் இன்புற நீடு வாழ்வார்களாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

விநாயகர் மாண்பு

அற்று விடும் அல்லல் ஆறுதலுந்தான் பெறுவர்
விற்றுண்ணி மேவும் வேழமுகத் தைங்கரனை
நற்றுணையாய் நம்பி நாளும் வழிபடுவார்
சுற்றமுடன் நீடு வாழ்வார் சுகமே!

உலகியல் நலன்களையும் மறுமை இன்பங்களையும் முடிவில் வீடுபேற்றையும் நல்க வல்லது சிவ வழிபாடாகும். சிவநெறியின் உயிர்நாடியாக விளங்குவது திருவைந்தெழுத்து. சிவபெருமானின் திருப்பெயராகவும் அவன் வடிகவமாகவும் சிவபெருமானேயாகவும் திகழ்வது அம்மகா மந்திரம். அது பிரணவ வடிவமாக நிற்கும் நிலையில் சமஷ்டிப் பஞ்சாட்சரம் என்று பெயர் பெறுகிறது. எனவே ஓங்கார வடிவமாகி ஒளிரும் விநாயகப் பெருமான் சிவபெருமானே ஆவார்.

ஓங்காரத்துள் அகரம், உகரம், மகரமாகிய சிவம், சக்தி நாதம் அடங்கும் (விநாயகர் நாத தத்துவம்). எனவே அகர வுகர மகரங்கள் தம்மாற் பகருமொரு முதலாகி வந்த ஞான வடிவமே விநாயகர் திருவுரு. அகரம் சிவத்தையும் உகரம் சக்தியையும், உணர்த்தி நிற்பதால் சிவமும் சக்தியும் சேர்ந்து மலர்ந்ததொரு ஞானத்திருமேனியே நம் கருமேனி கழிக்க வந்த கணபதியின் வடிவம்.

விநாயகர் என்ற சொல் (வி – மேலான ; நாயகர் – தலைவர்) மேலான தலைவர் என்பதாகும். தமக்கு மேல் ஒரு நாயகர் இல்லாதவர் என்பதும் அதற்குப் பொருள். விநாயகர் வேறு பரமசிவம் வேறு என்பதல்ல. விநாயகருக்கு பிள்ளையார் என்று ஒரு பெயர் உண்டு. பிள்ளை + ஆர். 'ஆர்' சிறப்பு விகுதி. இதனை பிள்ளை + யார் என்று பிரித்தால், யார் பிள்ளை என்று வரும். சிவனே பிள்ளையாக வந்தார் என்று பொருள் கூறுதலும் பொருந்துகின்றது. சிவபெருமான் எவ்வாறு ஆண் பெண்ணாகத் திகழ்கிறாரோ அங்ஙனமே விநாயகரும் விளங்குகிறார். நாகர்கோயிலில் வடிவீஸ்வரத்தில் அழகம்மன் கோயிலில் வீணை வாசிக்கும், புலிக்கால்களை உடைய ஒரு பெண் விநாயகர் சிலை உள்ளது. சுசீந்திரத்தில் நீலகண்ட விநாயகர் சிலை ஒரே கல்லால் மிகப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டது. இதே கோயிலில் பெண் விநாயகர் சிலை ஒன்றும் உள்ளது. இதைப் பக்தர்கள் அன்புடன் 'விநாயகி' என்று அழைக்கிறார்கள்.

விநாயகர் தோற்றச் சிறப்பு

விநாயகர் தோற்றம் குறித்துப் பல கதைகள் உண்டு. சிறந்தது விநாயகர் புராணம். அதுபற்றிச் சிந்திப்போம். கயமுகாசுரன் என்ற அசுரன் சிவத்தை நோக்கித் தவம் இருந்தான். அத்தவத்தால் அவன் எப்படையினாலும், எம்மக்களாலும் இறவாதிருக்க வரம் பெற்றான். ஆனால் யானையின் உருவத்தில் வருகின்றவனால் இறவாதிருக்க வரம் பெற்றானில்லை. இவனால் எல்லையில்லாத் தொல்லைப்பட்ட தேவர்கள் இறைவனிடம் முறையிட்டனர். இறைவன் "நாம் ஆனைமுகத்தோடு தோன்றி அவனை அடக்குவோம்" என்றருளிச் செய்தார். அங்ஙனமே ஒரு நாள் இறைவன் அம்மையோடு கயிலை மலை மீதுள்ள ஓரழகிய நந்தவனம் சென்று அங்குள்ள ஓர் ஓவிய சாலையைக் காட்டினார். இறைவன் அவ்வோவியங்களில் பிரணவ வடிவினதாகிய ஆண் யானை வடிவத்தை எடுத்துக் கொண்டு, உமையவளிடம் பெண் யானை வடிவத்தை எடுத்துக் கொள்ளும்படி கூறினார். கயமுகாசுரன் யானை முகமுடைய ஒருவரால் அழிக்கப்பட வேண்டியிருத்தலின் சிவமும் சக்தியும் ஆண் பெண் யானையாக உருக்கொண்டு மந்திர உடல் வடிவங்களாக இயைந்து ஒன்றுபட்டபோது அப்பிரணவ மந்திர உருவமாகிய விநாயகர் தோன்றியருளினார். தேவர்களின் முறையீட்டின்படி கயமுகாசுரனைத் தம் கொம்புகளில் ஒன்றை ஒடித்து அதனையே ஆயுதமாகக் கொண்டு அழித்தார். கயமுகாசுரன் பெருச்சாளி வடிவங் கொண்டு எதிர்த்து வர அதனை அடக்கி ஊர்தியாகக் கொண்டு அதன்மேல் எழுந்தருளினார்.

விநாயகரே முதற்கண் வழிபடப்படும் கடவுள். ஆதலால் மந்திரங்களுக்கெல்லாம் முதலாயுள்ள பிரணவம் என்னும் ஓங்காரம் அவருக்கு உரியதாயிற்று. ஓங்காரம் யானை வடிவத்தோடு ஒத்திருத்தலின் யானை வடிவம் அவ்வோங்காரத்தை நினைப்பிக்கும். எனவே யானை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முகத்தோடு கூடிய விநாயகரது வடிவம் அவர் ஓங்கார வடிவினர் என்பதை உணர்த்தும். இதனையே திருஞான சம்பந்தரும்

"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!'

என்ற தம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

விநாயகப் பெருமான் கடவுள், மனிதர், தேவர், விலங்கு முதலிய எல்லா உயிர்களுக்கும் அருள்புரிபவர். எனவேதான் அதை உணர்த்தும் வகையில் அவர்தம் திருவுருவத்தில் இடைக்குக் கீழ் மனிதக் கூறும், இடைக்கு மேல் கழுத்துவரை தேவக் கூறும் அதற்கு மேல் விலங்குக் கூறும் அமைந்து காணப்படுகிறார்.

அறிவிலும் பண்பிலும் உயர்வு பெற்றால் விலங்குகளும் உயர்வாக மதிக்கப்படும். அவற்றில் தாழ்ந்தால் தேவரும் மனிதரும் கூட இழிந்தவர்களாகக் கருதப்படுவர் என்னும் தத்துவத்தையே விநாயகரின் திருவுருவ அமைப்பு நமக்கு உணர்த்துகிறது.

ஐங்கரன்

பெருமானின் ஐந்து திருக்கரங்களும் திருவைந்தெழுத்தை உணர்த்துவதாகும்.

அங்குசம் தாங்கிய வலக்கை சிகரம், பாசம் பற்றிய இடக்கை வகரம், தந்தம் ஏந்திய வலக்கை யகரம், மோதகம் உள்ள இடக்கை நகரம், துதிக்கை மகரம். இப்படியாக 'சிவாய நம' என்னும் திருவைந்தெழுத்தை விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் உணர்த்துகின்றன.

ஐம்பெரும் சக்தி

விநாயகப் பெருமான் பஞ்சபூதங்களையும் தம்முள் அடக்கி முழு முதல்வனாகக் காட்சி தருகிறார். அவரது மடித்து வைத்துள்ள ஒரு பாதம் பூமியையும், சரிந்த தொந்தி நீரையும், அவரது மார்பு நெருப்பையும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரண்டு புருவங்களும் சேர்ந்த அரைவட்டம் காற்றையும், அதன் நடுவில் வளைந்திருக்கும் கோடு ஆகாயத்தையும் உணர்த்தும்.

பெருமான் தம் திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்கள் ஐந்தொழிலை உணர்த்துகின்றன. அவரது பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒடிந்த தந்தம் காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளையும் குறிப்பிடுகின்றன.

மனித உடம்பில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம், ஆக்ளை என்ற ஆதாரங்கள் இருக்கின்றன. இவைகளில் முதல் ஆதாரமாகிய மூலாதாரத்தில் உறைபவர் முதல்வரான விநாயகர்.

மற்றைய மதங்கள் போற்றும் விநாயகர்

குஜராத்தில் குடைகோயிலில் உள்ள கணேசரை ஜைனர்களும் வணங்குகிறார்கள். மும்பை இந்திய வரலாற்று ஆராய்ச்சி நிலையத்தில் செம்பாலான பிள்ளையார் உருவங்கள் சில உள்ளன. அவை ஜைன வழிபாட்டாளர்களிடமிருந்து கொண்டு வரப்பட்டவை; திருவாசி உட்பட எல்லாம் மிக அழகிய வேலைப்பாடுள்ளவை.

விநாயகர் வழிபாடு பௌத்த மதத்திலும் பரவியிருந்தது. அவர்கள் 'கணபதி ஹ்ருதயம்' என்ற மந்திரத்தை உருவேற்றுவதும் உண்டு. பௌத்தர்கள் கணபதியை மூன்று கண்ணோடு கூத்தாடும் நிலையில் அமைத்திருக்கிறார்கள். புத்த கணபதிகளில் ஒன்று தலையில் கரண்ட மகுடத்திற்குப் பதிலாகத் தலைப்பாகை கட்டியுள்ளது. இதை 'மகா புருஷ லட்சணம்' என்று அவர்கள் பாராட்டுகிறார்கள். பௌத்த புராணம் விநாயகரை 'ஞானதேவன்' என்றும் 'மாயையை வென்றவன்' என்றும் சொல்கிறது. புத்தர் ஆனந்தன் என்ற தமது சீடருக்கு "கணபதி ஹ்ருதயம்" என்னும் மந்திரத்தை உபதேசித்தார் என்றும் சொல்லப்படுகிறது.

வெளிநாடுகளில் விநாயகர் புகழ்

பர்மாவில் 'மகாபிணி' என்றும், திபெத்தில் 'த்சோக் பராக்' என்றும் காம்போஜத்தில் 'பிராஹ்கணஸ்' என்றும் மங்கோலியாவில் 'தேஷ்கார்' என்றும், சீனாவில் 'க்வான்ஷிடியிக்' என்றும், ஜப்பானில் 'வினாயக்ஷா'

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்றும் விநாயகர் அழைக்கப்படுகிறார். கி.பி. 5–ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகர் பாஹியான் மூலமும் 6–ம் நூற்றாண்டில் ஹுவாங்சுவாங் என்பவர் மூலமும் சீனாவில் விநாயகர் புகழ் பரவியது.

நிருத்திய கணபதி, ஹேரம்ப கணபதி ஆகிய திருவுருவங்கள் திபேத், நேபாளம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. கிரேக்க நாட்டில் தூரத்தின் அளவைக் குறிக்கும் மைல் கல் கணபதி உருவத்தில் அமைக்கப்பட்டது. இதன் தத்துவம் 'நீண்ட வழியில் கணபதி துணை வருவார்' என்பதுதான்.

இத்தாலி நாட்டு 'ஜேனஸ்' கணபதியின் பிரதிபலிப்பாகும். எகிப்து நாட்டில் துவாரக பாலகர் கணபதி. ஜப்பானில் பௌத்த பிட்சு கோபோ டெய்ஷி என்பவரால் கணபதி புகழ் பரவியது. ரோம நாட்டுப் பிள்ளையார் 'ஜேனஸ்', ரோமர்கள் ஜேனஸ் கடவுளைப் பூஜித்தே காரியங்கள் தொடங்குகிறார்கள். எகிப்து பிள்ளையார் 'கோகஸ்' மோதகம் போன்ற பலகாரத்தையே நிவேதானமாக ஏற்கிறார். ஜாவாவில் கணபதியை ஆற்றோரங்களில் பார்க்கலாம். கலிபோர்னியாவில் பிள்ளையார் பத்மாசனத்தில் காட்சி தருகிறார். சாயாமில் பெருச்சாளி வாகனத்துடன் காட்சி தருகிறார். பர்மாவில் புத்தபிரானை காக்கும் காப்புத் தெய்வமாக பிள்ளையாரை வழிபடுகிறார்கள். சீனாவில் பிள்ளையார் நான்கு கைகளுடன் பைஜாமா உடையணிந்து முதுகில் திண்டுடன் விளங்குகிறார்.

திபெத் மக்கள் 'கணேசாயின' என்று தேவியின் உருவமாக அமைத்து விநாயகரை வழிபடுகிறார்கள். ஜப்பானிய மக்கள் விநாயகரை பிசாசுகளைக் கொல்ல வல்லவர் என்று நம்புகிறார்கள். அவர்கள் இவ்வாறான விநாயகருக்கு வைத்திருக்கும் பெயர் 'கோள்–கிட்மன்' என்பதாகும். யவன நாட்டு மக்களின் 'த்யோனிசஸ்' என்ற கடவுள் நமது கூத்தாடும் விநாயகரை ஒத்திருக்கிறார். அமெரிக்கப் பழங்குடி மக்கள் பிள்ளையாரை அறுவடை காலத் தெய்வமாக வழிபட்டு வந்தார்கள். பாபு நாகேந்திரவசு என்பவர் கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே நேபாளத்தில் விநாயகர் கோயில் இருந்தது என்றும், அதை அசோக சக்கரவர்த்தியின் சகோதரி கட்டியதாகவும் கூறுகிறார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நேபாளத்தில்

தாவாவில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சோவில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ரூபாய் நோட்டில் பிள்ளையார்!

இந்தோனேஷியாவில் விநாயகர் உருவம் பொறித்த நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன. 20 ஆயிரம் ரூபாய் நோட்டிலும் விநாயகர் உருவம் உள்ளது.

இவையன்றி இந்திய மண்ணின் மைந்தர்கள் பணி நிமித்தம் பல்வேறு நாடுகளிலும் உள்ளனர். அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட பல திருக்கோயில்களிலும் விநாயகர் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகின்றனர்.

மஞ்சளைப் பிடித்து வைத்தால் பிள்ளையார், மாட்டுச் சாணத்தைப் பிடித்து வைத்தால் பிள்ளையார் என எளிதான உருவிலிருந்து மகோன்னதமாக உருவெடுத்தும் அருளாசி நல்கும் பிள்ளையார் எண்ணிலடங்காப் பெயர்களில் எல்லா நாடுகளிலும் உள்ளது தெளிவாகிறது. மனம் நிறைவடைகிறது.

பண்டிகைகள் வழிபடுமுறைகள்

ஆவணி மாதம் சுக்லபக்ஷத்தின் நான்காம் நாள் விநாயக சதுர்த்தியாகும். இதுவே ஓராண்டின் தொடக்கத்தில் வரும் முதல் மற்றும் பிரதான பண்டிகையாகும். சதுர்த்திக்கு களிமண் பிள்ளையார்தான் சிறப்பாகும். கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் விநாயக சதுர்த்தியை 'கணேச பூஜை' என்று பத்து தினங்கள் நவராத்திரி உற்சவம் போல் மிக்க கோலாகலத்துடன் கொண்டாடுகிறார்கள். கணேச பூஜை நிறைவு பெறும் பத்தாவது உற்சவ தினத்தன்று கணேச உருவத்தை ஊர்வலமாக மேளதாளத்துடன் பக்தர்கள் புடைசூழ ஆனந்தமாகத் திருவீதி உலா கொண்டு வந்து பிறகு தீர்த்தத்தில் எழுந்தருளச் செய்வர்.

சதுர்த்தியன்று இல்லத்தைச் சுத்தம் செய்து கோலம் போட்டு வீட்டை அலங்கரிக்க வேண்டும். வாழை மரம் மாவிலைத் தோரணம் கட்ட வேண்டும். பூஜை அறையில் சுத்தமான பலகையில் கோலம் இட்டு வைக்க வேண்டும். அதன் மேல் களிமண் பிள்ளையாரை கிழக்கு பார்த்தபடி ஸ்தாபனம் செய்ய வேண்டும். பிள்ளையாருக்கு முடிந்தால் முறைப்படி மண்டபம் அமைத்து மணமுள்ள பூக்களைக் கொண்டும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோரணங்களாலும் அலங்காரம் செய்ய வேண்டும். அலங்காரக் குடை அமைத்தும் அழகு சேர்க்கலாம்.

பிள்ளையாரை பலகையில் வைக்கும்போது வாக்கில் அல்லது மனதிலாவது முழுமுதற்கடவுளான விநாயகப் பெருமானே உன்னை இந்த இல்லத்தில் எழுந்தருளச் செய்விக்கின்றேன்; இக் குடும்ப நலனுக்கும் உலக நன்மைக்குமாக நாங்கள் செய்யும் பூஜையினை மனமுவந்து ஏற்று அனைவருக்கும் அருள்புரிய வேண்டும் என வேண்டிக் கொள்ள வேண்டும். பின்னர் முறைப்படியான அலங்காரங்கள் செய்தலைத் துவங்க வேண்டும்.

முப்புரி நூலினை அணிவிக்க வேண்டும். விபூதி, சந்தனம், அதன் மேல் குங்குமம் இட வேண்டும். சந்தன குங்குமம் சிரசின் மகுடம் இரு புருவங்களிடையே உள்ள நெற்றி, கைகளில், நாபியில், பாதங்களில் இடுதல் உகந்தது. சிலர் அபிஷேகம் செய்யப் பிரியப்படுவார்கள். களிமண் பிள்ளையாருக்கு இயலுமா எனத் தோன்றுவது இயற்கை. அதற்கு சுத்தமான நீர், பன்னீர், பால், சந்தனம், விபூதி, இளநீர், பழரசம், தேன், தயிர், நெய், பஞ்சாமிர்தம் மீண்டும் நீர் ஆகியவைகளை ரோஜா போன்ற வாசனை மலரினால் தொட்டு பிம்பத்தின் மீது லேசாக படுமாறு மும்முறை தெளித்து அபிஷேகம் செய்விக்கின்ற பாவனை செய்வித்து அதனை ஏற்றருளச் செய்யுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்.

உருவத்தின் தன்மைக்கு ஏற்ப ஒரு ரூபாய் நாணயம் அல்லது 25 பைசா நாணயத்தை கையில் அல்லது பாதத்தில் பதிக்க வேண்டும். வசதியுள்ளவர் பொற்காசும் பதிக்கலாம். பட்டுத்துண்டு அல்லது இதர வகையான புது வஸ்திரம் உருவத்திற்கேற்ப மடித்து மாலையிடுதல் போல சாத்தலாம்.

பின்னர் புஷ்ப அலங்காரம். விநாயகருக்கு மிகவும் உகந்த அருகம்புல் சார்த்துதல் மிகவும் அவசியமானது. எருக்கம்பூ மாலையணிவிக்க வேண்டும். மரு, மல்லி, முல்லை, ரோஜா, வன்னி, மாவிலைக் கொழுந்து போன்ற 21 வகைப் பத்திரங்கள் (தற்போது பண்டிகை சமயம் கடைத்தெருவில் அனைத்தும் சேர்த்து கட்டி விற்பனை செய்கின்றனர்). இவையனைத்தும் கலந்த தங்கள் ரசனைக்கேற்ப விக்கிரகத்தினை அலங்கரிக்க வேண்டும். வசதியுள்ளவர்கள் தனி மண்டபம் அமைத்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருபுறமும் வாழைக் கன்று, கரும்பு, மாவிலைத் தோரணம் கூட செய்யலாம். தங்க ஆபரணங்கள் அணிவதும் உண்டு.

நைவேத்தியத்திற்கு தேவையானவை. பழங்கள், வாழை, கொய்யா, திராட்சை, நார்த்தை, நாவல், விளா, பெரப்பம்பழம் மற்றும் வெள்ளரி, சாத்துக்குடி, ஆப்பிள், பலா, மாங்கனி போன்ற பழங்களும் படைக்கலாம். கரும்பு துண்டு வைத்தல் வேண்டும். பலகாரங்கள், சுத்தம் செய்த வாழையிலை நுனி வடபுறமாக இருக்கும்படியாக போட்டு நீர் தெளித்தல் வேண்டும். பெரிய தாம்பாளத்தில் இதை வைத்தால், எடுப்பதற்கு வசதியாக இருக்கும். இதில் அப்பம், மோதகம், கொழுக்கட்டை, உளுந்து வடை, எள்ளுருண்டை, கடலை உருண்டை, முறுக்கு வகைகள், அவுல் வெல்லத்தில் நனைத்தது, குறைந்தது இருவகையில் சுண்டல், இட்லி அதன் மேல் கரும்பு சர்க்கரை நெய் வைத்து, உரித்த வாழைப்பழம் ஆகியவை படைத்திட வேண்டும். தேங்காய் உடைத்து இருதுண்டுகளில் கீழ்புற பகுதியில் உள்ள நாரினை அகற்றி முக்கண்ணும் தெரியுமாறு விக்கிரகம் முன்பு வைக்க வேண்டும். அத்துடன் வெற்றிலை, பாக்கு, பழம் ஆகியவை படைக்க வேண்டும். படையல் அருகே ஓர் புஷ்பம் வைத்தல் உகந்தது.

பின்னர் தூபம், நெய் தீபம் காட்டி நீர் சுற்றி விநாயகப் பெருமானை நைவேத்தியப் படையலை ஏற்று அருளுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். அனைத்துப் பொருட்களையும் கையால் பகவானுக்குச் செலுத்தும் பாவனையை புரிதல் வேண்டும். பகவான் ஏற்றுக் கொள்ளுமாறு மனதில் வேண்டிக் கொண்டு 2 நிமிடம் கண்களை மூடிக் கொண்டு விக்கினேஸ்வரப் பெருமான் ஏற்று உண்பதாக பாவனை செய்து மௌனமாக இருத்தல் அவசியமாகும்.

விநாயகர் நைவேத்தியப் பொருட்களை ஏற்றுக்கொண்ட நிலையில், விநாயகர் துதிப்பாடல்கள் வாய்விட்டு பாடவேண்டும். (இயலாதவர்கள் கேசட் போட்டுக் கொள்ள வேண்டியது).

அதன்பின் உத்தரணி நீரை மும்முறை சேவித்து கற்பூர தீபாராதனை செய்தல் வேண்டும். கற்பூரதட்டினை இருகரங்களால் அல்லது இடது கரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிடித்துக் கொண்ட வலக்கரத்தால் நமக்கு இடவலமாக (கடியாரச் சுற்றின்படி) விக்கிரகத்தின் பாதாதி கேசம் மும்முறை மெதுவாக சுற்றி வந்து, சிரசிலிருந்து கீழ்வரை நேர் நிலையில் அசைத்துக் காட்டி நெஞ்சம் வரை ஏற்றி இறக்கித் தட்டினை கீழே வைக்க வேண்டும். கற்பூர தீபத்தை மணமுள்ள மலரினால் சுற்றி சுவாமி மீது படுமாறு சேர்ப்பிக்க வேண்டும். தீபாராதனையினை இரு கரங்களால் ஏற்று கண்களில் ஒற்றிக் கொண்டு மற்றையோருக்கும் விபூதி, சந்தனம், மலர், குங்குமப் பிரசாதத்துடன் அளித்திட வேண்டும். கற்பூர ஆரத்தி வலக்கையில் செய்ய இடக்கையால் மணியசைத்து ஓசையெழுப்ப பழகும் வரை மணியின் பணியை மற்றவரைக் கொண்டே செய்தல் வேண்டும்.

விநாயகர் முன்னால் நமது தலையில் நெற்றியில் இரு கைகளின் முட்டியினால் குட்டி இரண்டு கைகளாலும் மாறு காதுகளைப் பிடித்துக் கொண்டு மும்முறை தோப்புக் கரணம் போட வேண்டும். பின்னர் தன்னைத்தானே மும்முறை வலம் வந்து சுற்றிக் கொண்டு ஆத்மபூர்வமாக மனமுருகி நாமாக்களைக் கூறிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். எண்ணியது திண்ணமானால் பகவான் அதனை ஏற்று நிச்சயம் நிறைவேற்றி வைப்பார். மாலையில் விளக்கேற்றி வழக்கமான பூஜை செய்தல் வேண்டும்.

மறுநாள் புனர்பூஜை செய்தல் வேண்டும். சிறப்பு கறி வகைகளுடன் வடை பாயசம் பழம் படைத்து அன்னம் பாலித்து பூஜை செய்து வணங்க வேண்டும். பின்னர் பீடத்துடன் விக்கரகத்தை வடப்புறமாகச் சிறிது நகர்த்தி வைத்தல் வேண்டும். இத்துடன் சதுர்த்தி பூஜை நிறைவடைகிறது. இருநாளில் களிமண் விக்ரகத்தை கடல், ஆறு, குளம், கிணறு போன்ற நீர் நிலையில் கரைத்திட வேண்டும். நீரில் மெதுவாக சிறிதளவு நீர்மால்யத்துடன் விட வேண்டும். தொப்பென்று வேகமாக சிறுவர்கள் மூலம் வீசி எறிதல் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

சைவ நெறியில் ஊறித் திளைத்த நம்மவர்களுக்கு சதுர்த்தி பூஜை செய்ய கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் இது எழுதப்படவில்லை. இளைய தலைமுறையினருக்கும் ஓரளவு வழிகாட்டியாக இருக்கட்டும் என்ற கருத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பயன்பட்டால் இது எழுதியதும் பயனுறும் என நம்புகிறோம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ விற்றுணியார் துதி

நானா தேசத் திசையாயிரத் தய்நூற்றுவர்
நாடியே வந்தமைத்த விநாயகப் பெருமானை
நான்பாடிப் போற்றிட நல்வாக்கு தனை நல்கி
நலம்பல பெற்றுமே குலம் நன்கு தழைத்திடவே
தேன்போன்ற தமிழமுது தெவிட்டாது படைத்திடவே
தென்புலத்து வாணியர்தாம் செழிப்புற வாழ்ந்திடவே
வான்புகழ் கொண்டு வளம்பல பெற்றிடவே
வந்தருள்புரி விற்றுணியாரே போற்றி! போற்றி!! 1

பரசுராம தேசந்தன்னில் கோயில் கட்ட
பன்னாட்டு வாணியர் நிலத்தைக் கேட்க
அரசு நன்றிக் கடனுக்காக இடத்தைக் காட்ட
அற்புதமாய் விக்கினங்கள் தீர்த்து வைக்க
முரசு கொட்ட திருக்கோயில் முனைந்து வளர
முத்து விற்கும் செட்டிமார்கள் முகம் மலர
சிரசு தாழ்த்தி வணங்கிடும் தெய்வங்கள் தோன்ற
சீரருள் புரிந்த விற்றுணியாரே போற்றி! போற்றி!! 2

முழுமுதற் கடவுளாய் நின்றாய் போற்றி
மும்மலம் கடந்தாட் கொண்டாய் போற்றி
மழுமான் சிவனின் பிள்ளாய் போற்றி
மறைநூல் முதலில் உள்ளாய் போற்றி
எழுகின்ற சிந்தைக்கு வித்தாய் போற்றி
ஏழேல் பிறப்பிலும் உற்றாய் போற்றி
தொழுபவர் துன்பம் துடைப்பாய் போற்றி
தோன்றியருள் விற்றுணியாரே போற்றி! போற்றி!! 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓங்கார வடிவத்தில் அமைந்தாய் போற்றி
ஓங்கார வாச்யாய நின்றாய் போற்றி
ஆங்கார அகத்தினை நீக்குவாய் போற்றி
அய்நூற்றுவர் குலம்வாழ அருளுவாய் போற்றி
ஐங்கரப் பெருமானாய் அமர்ந்தாய் போற்றி
ஐயமின்றித் துதிப்போர்க்கு அருளாய் போற்றி
பொங்கரச் சிவனின் மூத்தோய் போற்றி
பொலிவான விற்றுணியாரே போற்றி! போற்றி!! 4

அருள்மிகு விற்றுணி விநாயகா போற்றி
அனைத்து விக்கினங்கள் தீர்ப்பாய் போற்றி
பொருள் மிகக் கொண்ட குலநாயகா போற்றி
பொதிகைகவித் தென்றல் தமிழ் ஏற்பாய் போற்றி
இருள் நீக்கி இன்னருள் புரிவாய் போற்றி
இல்லாமை இயலாமை அல்லாய் போற்றி
மருள்நீக்கி மனஅமைதி தருவாய் போற்றி
மகோதர விற்றுணியாரே போற்றி! போற்றி!! 5

அன்னை தந்தை சுற்றியுலகமென்றாய் போற்றி
ஆற்றோரம் குளத்தோரம் அமர்ந்தாய் போற்றி
தன்னைச் சுற்றியவர்க்கு வரம் தந்தாய் போற்றி
தாரகாந்த காயமாய் நின்றாய் போற்றி
முன்னை செய்த பாவங்கள் போக்குவாய் போற்றி
முக்தியடையும் மார்க்கத்தைக் காட்டுவாய் போற்றி
உன்னிடத்தில் பிரணவத்தை வைத்தாய் போற்றி
உலகுபுகழ் விற்றுணியாரே போற்றி! போற்றி!! 6

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உமையவளின் திருவருளால் உதித்தாய் போற்றி
உடையவரே வந்தாலும் தடுத்தாய் போற்றி
தமையுணர்த்த தனிமுகத்தைப் பெற்றாய் போற்றி
தந்தத்தால் அசுரன்தனை வென்றாய் போற்றி
இமைபோன்று பக்தர்தமைக் காப்பாய் போற்றி
இந்திரனே இகழ்ந்தாலும் வென்றாய் போற்றி
எமைக்காக்க எப்போதும் இருப்பாய் போற்றி
எங்கள் குல விற்றுணியாரே போற்றி! போற்றி!! 7

அஞ்ஞானம் தன்னை அகற்றுவாய் போற்றி
அகக்கண் திறந்தருள் புரிவாய் போற்றி
மெய்ஞானந் தன்னை உணர்த்துவாய் போற்றி
மேலான வாழ்க்கையினை வழங்குவாய் போற்றி
விஞ்ஞானந் தன்னில் மெய்ப்பிப்பாய் போற்றி
விந்தைமிகு பிரணவத்தை விளக்குவாய் போற்றி
எஞ்ஞானம் இல்லோர்க்கும் மருந்தாவாய் போற்றி
ஏகமுக்திதாய விற்றுணியாரே போற்றி! போற்றி!! 8

அங்குசப் பிள்ளையாய் பிறந்தாய் போற்றி
ஆகாயம் வரைதான் வளர்ந்தாய் போற்றி
எங்குனைத் தொழவும் இருப்பாய் போற்றி
எப்படிப் பிடித்தாலும் நகராய் போற்றி
தங்குதடை எதற்கும் இல்லாய் போற்றி
தலைகுட்டி வேண்டினால் ஏற்பாய் போற்றி
இங்குள்ள மாயத்தை அறுப்பாய் போற்றி
இனியதெங்கள் விற்றுணியாரே போற்றி! போற்றி!! 9

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எத்தனை வடிவங்களில் இருப்பாய் போற்றி
எவ்விதமாய்த் துதித்தாலும் ஏற்பாய் போற்றி
சித்திதனை வழங்கியருள் புரிவாய் போற்றி
சிறப்பான பலன்களைத் தருவாய் போற்றி
அத்தனை கடவுளர்க்கும் முதலாய் போற்றி
ஆனந்த நர்த்தனம் ஆடுவாய் போற்றி
புத்திதனை வழங்கும் நித்யாயாய் போற்றி
பூதாய விற்றுணியாரே போற்றி! போற்றி!! 10

காவிரி நதியினை விடுவித்தாய் போற்றி
காகமாக வந்து உருவெடுத்தாய் போற்றி
பூவிரி சோலைதனை அமைத்தாய் போற்றி
பூம்புகார் வளம்பெற கண்டாய் போற்றி
பாவிரி சிலம்புதனைப் பாடவைத்தாய் போற்றி
பாவேந்தன் இளங்கோவை அறியவைத்தாய் போற்றி
ஆவிரி அய்ந்தூற்றுவரை வாழவைப்பாய் போற்றி
அம்ருதாய விற்றுணியாரே போற்றி! போற்றி!! 11

முருகனுக்குத் திருமணத்தை முடித்து வைத்தாய் போற்றி
மூதாட்டி ஔவைதனைப் பாடவைத்தாய் போற்றி
அருகன்முதல் தேவர்களை அடக்கி வைத்தாய் போற்றி
அவரவர் கடமைதனை உணரச் செய்தாய் போற்றி
உருகருத்த சனியுன்னிடம் நடக்க வைத்தாய் போற்றி
உன் பார்வை பட துன்பம் விலக வைத்தாய் போற்றி
இரு கரத்தால் சிரம் கூப்பி வணங்க வைத்தாய் போற்றி
ஈர்த்தருளும் விற்றுணியாரே போற்றி! போற்றி!! 12

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அம்பிகைக்குக் காவல் செய்ய அவதரித்தாய் போற்றி
அனைத்துலக மக்களுக்கும் அருள்புரிவாய் போற்றி
நம்பிக்கை கொண்டோரை ஏற்றிடுவாய் போற்றி
நல்லபல செயல்களுக்கு முதலாவாய் போற்றி
தும்பிக்கை ஆழ்வார் எனப்படுவாய் போற்றி
தூய வைணவர்க்கும் துணையாவாய் போற்றி
எம்பிரான் சக்தியுமே உலகென்றாய் போற்றி
எங்கள் குல விற்றுணியாரே போற்றி! போற்றி!! 13

இமயமுதல் குமரிவரை இருந்திடுவாய் போற்றி
இல்லாத கோயில் இல்லை என்பாய் போற்றி
சமய சாதி வேறுபாடு களைந்திடுவாய் போற்றி
சங்கத் தமிழ் முன்றும் வளர்த்திடுவாய் போற்றி
தமயனாகத் தம்பிக்கு உதவிடுவாய் போற்றி
தம்மை வணங்காமையும் உணர்த்திடுவாய் போற்றி
காமாய நாமத்தைப் பெற்றிடுவாய் போற்றி
கல்பாத்தி விற்றுணியாரே போற்றி! போற்றி!! 14

கற்புடைக் கண்ணகி குலம் காத்தாய் போற்றி
காலமெல்லாம் காப்பியத்தைக் கூற வைத்தாய் போற்றி
பொற்புடைத் தெய்வத்தைப் போற்ற வைத்தாய் போற்றி
பொங்கியவள் குலமெங்கள் குலமென்றாய் போற்றி
உற்பாத விதிப்படி நடக்கச் செய்தாய் போற்றி
ஊழ்வினைத் தத்துவத்தை உணரவைத்தாய் போற்றி
கற்றபெரும் புலவர்களைப் பாடவைத்தாய் போற்றி
காக்கும் கருணை விற்றுணியாரே போற்றி! போற்றி!! 15

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அன்னைத் தமிழ் நாடெங்கள் நாடென்றாய் போற்றி
அகிலத்தில் சிங்கக் கொடி பறக்க வைத்தாய் போற்றி
உன்னைத் துதித்துலகு சுற்றிவரச் செய்தாய் போற்றி
உலக நாட்டு வாணிபத்தை உயர வைத்தாய் போற்றி
தன்னைக் காத்த புலவரை மதிக்கச் செய்தாய் போற்றி
தங்கப்பழம் அரசருக்கு அளிக்க வைத்தாய் போற்றி
தொன்மைச் சிறப்பு வளர வரம் தருவாய் போற்றி
தோன்றிற் புகழ் விற்றுணியாரே போற்றி! போற்றி!! 16

தெய்வதேவர் மனிதவிலங்கு காத்திடுவாய் போற்றி
தேடிவரும் உயிரனைத்தும் ஏற்றிடுவாய் போற்றி
உய்வுதர இடைக்குக் கீழ் மனிதக்கூறாய் போற்றி
உயர்வுதர கழுத்துவரை தேவக்கூறாய் போற்றி
தொய்விலா முகம் முழுதும் விலங்கு கூறாய் போற்றி
தோன்றி உயர் பண்பினால் ஒன்னென்றாய் போற்றி
அய்யன் பிரம்மமாக ஆதிகாரணமாய் போற்றி
அய்ந்நூற்றுவர் குல விற்றுணியாரே போற்றி! போற்றி!! 17

அகரமாகக் கால்மடித்து அமர்ந்துள்ளாய் போற்றி
ஆதிகடவுள் என்பதற்குச் சான்றானாய் போற்றி
உகரமாகத் துதிக்கை தலை உடையவனாய் போற்றி
உயர்வான தந்தபதி அறிவானாய் போற்றி
மகரமாக வயிறதனைப் படைத்திட்டாய் போற்றி
மாநாதவிந்து உருவில் ஆடச் செய்தாய் போற்றி
அகரஉகர மகாரகண் அடைந்துள்ளாய் போற்றி
அய்ந்நூற்றுவர் குல விற்றுணியாரே போற்றி! போற்றி!! 18

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிகரமாக வலக்கையில் அங்குசமாம் போற்றி
சிவாயநம தத்துவத்தைக் காட்டிடுமாம் போற்றி
வகரபாசம் யகரதந்தம் இடவலதிலாம் போற்றி
வலம்புரியில் ஓம்காரம் அமைந்திடுமாம் போற்றி
நகரமாக இடக்கையில் மோதகமாம் போற்றி
நம்பியாண்டான் நம்பிக்கு போதகராம் போற்றி
மகரமாக வயிறு துதிக்கை வளைந்திடுமாம் போற்றி
மநோமயாய விற்றுணியாரே போற்றி! போற்றி!! 19

ஒருமைப்பாட்டுத் தத்துவம் உணர்த்திடுவாய் போற்றி
ஓங்குபுகழ் உலகெங்கும் இருந்திடுவாய் போற்றி
பெருமைமிகு நாடெல்லாம் உன்நாடாம் போற்றி
பெயர் மட்டும் வெவ்வேறாய் அமைந்திடுவாய் போற்றி
கடுமையிலும் தனி ஈர்ப்பைக் கொண்டிடுவாய் போற்றி
கண்கண்ட தெய்வமாய் அருளிடுவாய் போற்றி
தருமமிகு அய்நூற்றுவரை வாழவைப்பாய் போற்றி
தாரகஸ்தாய விற்றுணியாரே போற்றி! போற்றி!! 20

திருவருளும் குருவருளும் நிரம்பப்பெற்ற
திருப்பாலக் காடதனில் அமையப்பெற்ற
பெருமைமிகு வணிகர்குலம் பூஜை செய்ய
பெற்றதொரு நல்லிடத்தில் கோயில் கொண்ட
கருவறையில் உறையுமந்த ஜீவன் முக்தர்
கனிவுடனே நல்லாசிதனை வழங்கிக் காக்க
அருமைமிகு பக்தர் கூட்டம் நிரம்பி வழிய
ஆதரித்துதவு விற்றுணியாரே போற்றி! போற்றி!! 21

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ காசி விஸ்வநாதர் துதி

சிவனமுது எடுக்காது தமதுணவு கொள்ளாது
சிவபூஜை கொண்ட வணிகர்தம் திருக்கூட்டம்
புவனமதில் பசுமைமிகு சோலைக் காட்டில்
புனிதமிகு புண்ணியனின் திருவுருவை வைத்து
தவமதனில் தழைத்தோங்கித் தம்மை மறந்து
தாம் உணர்ந்த அருளின்பம் அனைவராலும்
உவப்பதற்கு உலகநாதன் உய்வை வேண்டி
உடையானாம் இறைவனுக்குச் சரணம் செய்வோம்! 1

காசியிலே சிவனோதும் பிரம்ம மந்திரம் – பாலக்
காட்டினிலே கேட்கவொரு வழி அமைத்து
ஆசிபெற அருளாளன் தயவு நாடி
ஆதிரையன் விஸ்வநாதன் பெயரைச் சூட்டி
ஊசிமுனைத் தவமிருந்த உமையருளால்
உலகமூர்த்தி உற்றானின் புகழைப் பாடி
மாசில்லா மாமணியை மகிழ்ந்து போற்றி
மந்திரனாம் மாதேவனைச் சரணம் செய்வோம்! 2

ஆதியும் அந்தமும் இல்லாத அமலன்
அருட்பெருஞ் ஜோதியாய் நின்ற அருளாளன்
பாதிதன் பாகத்தை பகிர்ந்தளித்த சித்தன்
பரமயோகி பாசுபத பரமனாம் பத்தன்
வீதிவழித் துணைவனாய் விரைவுற்ற வித்தன்
விரும்பியவர் மனதிலே உறையும் விருத்தன்
சாதிகீத வர்த்தமான சாரணச் சதுரன்
சதாசிவ சங்கரனைச் சரணம் செய்வோம்! 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நமச்சிவாயம் கூறாத நா என்ன நாவே
நம்பிக்கை வைக்காத சொல் என்ன சொல்லே
நம் சிவனைப் பாடாத வாய் என்ன வாயே
நாடியதை அடையாத பொருள் என்ன பொருளே
இமயத்தை வணங்காத தலை என்ன தலையே
இமை கண்ணைக் காக்காத கண் என்ன கண்ணே
கமல பாதம் பற்றாத கை என்ன கையே
கற்பகத்தானைக்கை கூப்பிச் சரணம் செய்வோம்! 4

உள்ளத்துப் பக்தியினை அவன் உணர்வான்
உண்மைப் பக்தனை அவன் ஏற்பான்
தெள்ளத் தெளிந்துமே துதித்து வந்தால்
தேவைக்கு ஏவலனாய் வந்து நிற்பான்
அள்ளியே விடந்தன்னைதான் உண்பான்
அமரர்க்கு அமுதத்தைத் தந்து விடுவான்
துள்ளியே அவன் பாதம் பற்றிடுவோம்
துணை வேறு இல்லையெனச் சரணடைவோம்! 5

ஸ்ரீ விசாலாட்சி அம்பிகை துதி

காசிக்குச் சென்று வந்த அய்நூற்றுவர்
கையோடு எடுத்து வந்த சிவலிங்கத்தை
ஆசிபெற அம்பிகை விசாலாட்சியுடன்
ஆகமப்படி அமைத்தோர்க் கருள் புரிவாய்! 1

ஆசாபாசமதை நீக்கியே அருள் செய்து
பூசாமந்திரத்தைப் பூரணமாய் தெளிவு செய்து
ஈசானுபவ இன்பத்தில் திளைக்கச் செய்து
தாசானு தாசனுக்கென்றும் அருள்புரிவாய்! 2

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாசத்தைத் தேடிவந்த பிள்ளைக்கு
பாலூட்டிப் பசியாற்றும் அன்னைபோல்
பதியினைத் தேடி வரும் அடியார்க்கு
பதந்தன்னைக் காட்டியே அருள்புரிவாய்! 3

வருணன் வரையின்றி வழங்கும் காட்டில்
வரிசை செய்து வேண்டி வரும் அன்பர்கட்கு
தருணத்தில் தக்கதோர் உதவி செய்து
தாளாளா வேண்டுதலுக்கருள் புரிவாய்! 4

செட்டு செய்ய இங்கு வந்த செட்டிமார்கள்
சேகரித்த பொருளில் சேடம் செய்து
இட்டு நிரப்ப இயலாத இன்பமுடன்
இறைவிக்களித்த இனத்திற்கருள்புரிவாய்! 5

பத்திரைக் குறிஞ்சிமலை நாடதனில்
பத்திமை கொண்ட நல் அய்ந்நூற்றுவர்
நித்திய பூஜை நிறைவாகச் செய்துவர
நிரந்தர நிலைபேறுக் கருள்புரிவாய்! 6

அன்னத்தின் பூரணியாய் அமர்ந்த விசாலாட்சி
இன்னலென்ற பசிப்பிணியை இல்லையென்றாக்கி
என்னகூறித் தொழுதாலும் ஏற்புடைத்தொன்றாக்கி
கன்னல்மொழி அய்நூற்றுவரைக் காத்திடவருள் புரிவாய்! 7

பொன் விளையும் நாடதனில் கோயில் கொண்டு
பொற்புடைக் கண்ணகிக்குப் புகலிடமளித்து
மண்பட்ட காலடி கற்பின் மகிமைபாட
மாண்புடை எங்கள்குல மாதருக்கருள்புரிவாய்! 8

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சமயக் கொள்கைதனைத் தவறாது கடைப்பிடித்து
சைவநெறிப்படி நல்வாழ்வுதனை வாழ்ந்து
உமையவளின் வடிவமான உன்னையே நாடிவந்து
உளமுருகி வழிபடும் மாதருக்கருள் புரிவாய்! 9

சக்திபீடந்தன்னில் சக்தியாய் அவதரித்து
சாந்த ரூபிணியாய் சகலருக்கும் காட்சி தந்து
முக்தி பெறும் வரையில் முதல்வியாய்க் காத்துநின்று
பக்தியுடன் வருகின்ற மாதருக்கருள் புரிவாய்! 10

ஸ்ரீ ஸுப்ரமண்யர் துதி

நெற்றிக்கண் பொறியிலே பிறந்தவன்
நேர்மைமிகு கார்த்திகைப் பெண் வளர்த்தவன்
வெற்றிமாலை தமக்கென்றே படைத்தவன்
வெல்வதையே கலையாகக் கொண்டவன்
உற்றதொரு பழத்திற்குப் பறந்தவன்
உலகத்து நாயகனை முனிந்தவன்
பற்றுவிட்டு பழநிமலை நின்றவன்
பாருக்குப் பற்றுடனே அருளியவன்! 1

சகலநல் மங்களத்தை அளிப்பவன்
சமஸ்கிருத ஸுப்ரஹ்மண்யமென்பவன்
புகலிடமாய் வருபவரை ஏற்பவன்
புறம் சென்ற பிரம்மாவை அடைத்தவன்
முகமாறு தத்துவத்தை உடையவன்
முனைப்புடனே பரமனுக்கு குருவானவன்
அகரமுதல எழுத்துக்களின் படைப்பானவன்
அமுதான முத்தமிழைப் பிறப்பித்தவன்! 2

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மனிதர் சித்தர் முனிவர் தேவரென்றாலும்
மரணமிலா வரம்பெற்ற அரக்க ரென்றாலும்
புனிதமான புண்ணியன் சிவனென்றாலும்
புகழ்பெற்ற நளகலிங்க மன்னனென்றாலும்
இனிமையான திருமால் பிரம்மனென்றாலும்
இசைந்து பிடித்த உன்னிடம் யார் தப்பினர்
சனிபகவான் உன்னை மட்டும் ஈஸ்வரன் என்று
சரணடைந்தோம் சார்வின்றி விலகி நிற்பாயே! 4

உருக்கருத்த உன்னிடம் வேண்டி நிற்போர்
உற்பாத பலன்களால் சலனமுற்றோர்
மருவற்று உன்னையே வணங்கி நிற்போர்
மகிழ்வான வாழ்க்கைக்கு ஏங்கி நிற்போர்
அருமார்ந்த அஞ்சலியைத் திருவடியில் வைப்போர்
அடிமையாய் நின்றுன்னைச் சரணம் செய்வோர்
இருள் நிறத்துப் பொருளாலே பூசனை செய்வோர்
இழிந்த வாழ்வு நிமிர்ந்துயர நீங்கி நிற்பாயே! 5

காயத்ரி மந்திரத்தால் கடுமை குறைப்பாய்
காக்கைக்கு அன்னமிட்டால் ப்ரீதி அடைவாய்
மாயமான உலகுஉய்ய வழி செய்குவாய்
மண்ணுலகும் விண்ணுலகும் வழி நடத்துவாய்
தூயமான உள்ளமதை ஏற்று அருள்வாய்
துன்பத்திலும் நல்லதையே கொடுத்துக் காப்பாய்
நீயேதான் கதியென உன்னை வணங்குவோம்
நீலன் அந்தன் கதிர்மகனே கருணை புரிவாயே! 6

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நவராத்திரி நாயகி

ஆதி பரா சக்தியினை வணங்குகிறோம்
அவள் உலகின் அன்னையென உணருகிறோம்
ஆதியுலக இயக்கங்களும் அடங்கும் முன்றிலே
அதுசக்தி செல்வம் மற்றும் அறிவு என்பதாம்
பாதிபரமன் உடலைப் பெற்ற மலைமகள் துர்கா
பள்ளிகொண்ட பெருமாளின் அலைமகள் லக்ஷ்மி
மீதியுலைகைப் படைக்குமந்த பிரம்மனின் துணைவி
மிகுந்த ஞான கல்வி தரும் சரஸ்வதி தேவி! 1

அணிமா மஹிமாவென அஷ்டமா சக்தி
அன்னை பராசக்தியின் இஷ்டமா சக்தி
அணிமணியில் ஆர்வமிக்க திருமகள் சக்தி
ஆதிலக்ஷ்மி முதலான எண்வகை சக்தி
மணிபிறந்த மலைமகளாம் இச்சா சக்தி
மாயப் பிரபஞ்சத்தின் கிரியா சக்தி
கணிப்பொறியில் காணவோ இயலாச் சக்தி
கண்டுணரும் மாத்ருஞான குண்டலினி சக்தி! 2

நாள் முதலாம் நவராத்திரியில் மகேஸ்வரியாம்
நாள் தொடர்ந்து ராஜேஸ்வரி கௌமாரியாம்
நாள் மூன்றில் வராஹி கன்யா கல்யாணி
நாள் நாலில் மகாலக்ஷ்மி ரோகிணி என்போம்
நாள் ஐந்தில் மோஹினியாய் வைஷ்ணவி தேவி
நாளாறில் இந்திராணி சண்டிகா தேவி
நாள் ஏழில் மகா சரஸ்வதி சுமங்கலி என்போம்
நாளெட்டு ஒன்பதில் நரசிம்மி தருணி சாமுண்டியாம்* 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அன்னை பராசக்திக்குத்தான் எத்தனை வடிவம்
அகிலத்தை ஆளுமந்த ஈஸ்வரியன்றோ
தன்னை வணங்கும் உயிர்காக்கும் தாய் உருவிலே
தரணியெங்கும் பரந்த சக்தி பார்வதியன்றோ
உன்னைப் படைத்த தாயாக நீ உணர்ந்தால்
உன் மனதில் அமைதியன்பு ஊறிச் சுரக்கும்
நின்னைக் காக்க காத்திருக்கும் சக்தி தன்னை
நினைந்துருகி வேண்டியே பயனுறுவாய்! 4

பத்து வித்தை தந்திர சாஸ்திரத்திலே
பாங்கான தேவிசூத்தம் 'வாக்' என்பதாம்
பத்துவித தேவிகளை வணங்கும் உலகிலே
பாரிலுள்ள ஊரிலெங்கும் காளி முதலிலே
அத்துஇல்லா தாரா அடுத்து திரிபுர சுந்தரி
அகிலத்தை ஆளுமந்த புவனேஸ்வரி
வித்யாபகள மாதங்கி கமலச் சின்னமஸ்தா
வீரைவான செயலுக்குப் பைரவி தூமாவதி! 5

பரசுராம ஷேத்திரத்தில் பகவதி முதலாம்
பரிபூரண ஐஸ்வர்யம் 'பகம்' என்பதாம்
அரசுமுதல் ஆண்டிவரை ஏற்பது முதலாம்
அந்த மந்திரத்துதித்த பகவதி சொல்லாம்
முரசுகொட்டும் வீர்யம்யோனி நிமியம் ஸ்ரீஞானம்
முத்தான தாமம் யசஸ் மற்றும் விஞ்ஞானம்
சிரசுதாழ்த்தி ஏற்றுணரும் பகத்தின் பொருளாம்
சித்திபெற்று வாழ்வுயரும் பகவதி அருளால்! 6

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அன்னையை வணங்கி ஆராதனை செய்ய
அழகான கொலுபடிகள் நாம் அமைப்போம்
தன்னைப் படைத்த திருத் தெய்வங்கட்கு
தான் உருக்கொடுத்து பலவண்ணம் அமைப்போம்
என்னென்ன வடிவங்கள் எத்தனைதான் எண்ணங்கள்
எடுத்து வைத்த அழகினை எண்ணி வியப்போம்
உன்னையுலகு கொலுவிலே வைத்த தேவி
உரிய இடம் எப்போதும் தர வேண்டி நிற்போம்! 7

மனிதப்பிறவி எடுத்த இந்த ஜன்மம் முழுவதும்
மகாதேவிக்கே என அர்ப்பணம் செய்வோம்
புனிதம் வாய்ந்த ஒன்பது நாள் முழுவதும்
பூரணமாய்ச் சக்தியிடம் ஒப்படை செய்வோம்
இனிதம் வாழ்வில் உய்வுகண்டுயர வேண்டுவோர்
இச்சையுடன் சக்திபூஜை செய்து வருவோம்
பனிதம் தலையில் வந்து வீழ்ந்து விடியுமுன்னரே
பரமாத்மிகா மகாலக்ஷ்மி நாமம் சொல்லுவோம்! 8

சக்தி வழிபாட்டினால் சக்தி பெறுவாய்
சகல தேவைகளையுமே நீ அடைவாய்
பக்தியுடன் பராசக்தி புகழ் பாடுவாய்
பாவங்கள் அனைத்தையும் முடியச் செய்வாய்
ரக்தபீஜனை அழித்த யுக்தி போற்றுவாய்
ராஜேஸ்வரி காப்பதுறுதி என்று நம்புவாய்
முக்தி பெற பத்துவித்தை நீ பயிலுவாய்
முக்கியத்துவ காயத்ரீ முனைப்புடன் சொல்வாய்! 9

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

கண்டபத்து

நிருத்த தரிசனம்

தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

வினைப்பிறவி என்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே!

– மணிவாசகப் பெருமான்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.